பக்கங்கள்: 14

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 08 வள்ளுவர் ஆண்டு 2055 மார்கழி 05 வெள்ளிக்கிழமை 20.12.2024 கதிர் 043

## இனி இது ரகசியம் அல்ல!

இன்று இரண்டு வழக்குகளைப் பற்றித்தான் உங்களுடன் பகிர்ந்துகொள்ளப்போகின்றேன். முதல் வழக்கு நாடாளுமன்ற உறுப்பினர் பதவியைப் பறிப்பதற்கானது. இரண்டாவது வழக்கு கட்சித் தலைவர்பதவியைபறிக்கக்கூடாதுஎன்பதற்கானது.

யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அருச்சுனாவின் நாடாளுமன்றப் பதவியை வெறிதாக்கக் கோரி நீதிமன்றத்தில் வழக்குத்தாக்கல் ☞ 2

எட்கா ஒப்பந்தம் தொடர்பில்

## ஜனாதிபதி அநுர இலங்கை மக்களிடம் பகிரங்க மன்னிப்புக் கேட்கவேண்டும்

### முன்னாள் எம்.பி. உதய கம்மன்பில அழுத்தம்

இந்தியாவுடனான 'எட்கா' ஒப்பந்தத்தை ஏற்றுக்கொள்வதற்கான காரணத்தை ஜனாதிபதி மக்களுக்குத் தெளிவுபடுத்தவேண்டும் அல்லது மக்களிடம் பகிரங்கமாக மன்னிப்புக் கோர வேண்டும் என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில தெரிவித்தார்.

அவர் புறக்கோட்டை பகுதியில் உள்ள பிவிதுரு ஹெல உறுமய கட்சி காரியாலயத்தில் நேற்று செய்தியாளர்களிடம் பேசியபோது இது தொடர்பில் மேலும் தெரிவித்ததாவது:

இந்தியாவுடனான 'எட்கா' ஒப்பந்தத்தில் கைச்சாத்திடுவது குறித்துத் தொடர்ச்சியான பேச்சுக்களில் ஈடுபட ஜனாதிபதி அநுரகுமார திசநாயக்க இணக்கம் தெரிவித்துள்ளார் என்று இந்திய வெளிவிவகாரத்துறை அமைச்சு அறிக்கை வெளியிட்டுள்ளது.

மக்கள் விடுதலை முன்னணியின் தலைவரான அநுரகுமார திசநாயக்க ஜனாதிபதித் தேர்தலின் போது 'இந்தியாவுக்கு இலங்கையின் பொருளாதாரத்தை பலி கொடுக்கும் 'எட்கா' வேண்டாம்' என்று மக்கள் மத்தியில் பரப்புரை செய்தார்.

'எட்கா' ஒப்பந்தத்தை கைச்சாத்திட்டால் இந்த நாட்டுக்கு ஏற்படும் விளைவுகள் தொடர்பில் ஜனாதிபதிக்கு போதியளவான புரிதல் உள்ளதா என்பது சந்தேகத்துக்கிடமாக உள்ளது. அன்று 'எட்கா' ஒப்பந்தம் வேண்டாம் என்று குறிப்பிட்ட ஜனாதிபதி ☞ 2

## பழிவாங்கும் நோக்கத்தில்தான் மகிந்தவின் பாதுகாப்பு குறைப்பு

### பெரமுன எம்.பி. சானக சாடல்

ராஜபக்சக்களை பழிவாங்கும் நோக்கத்தில்தான் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவின் பாதுகாப்பு குறைக்கப்பட்டு, இராணுவ பாதுகாப்பு முழுமையாக நீக்குவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. ஆளும்தரப்பு தனது முடிவை மீள்பரிசீலனை செய்யவேண்டும் என்று ஸ்ரீ லங்கா பொது ஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் டி.வி.சானக தெரிவித்தார்.

ஸ்ரீ லங்கா பொது ஜன பெரமுனவின் ☞ 8

## வீண் விமர்சனங்களில் எந்த அர்த்தமுமில்லை

### ரணில் விக்கிரமசிங்க அறிக்கை

சர்வதேச நாணய நிதியத்துடனான உடன்படிக்கை குறித்து வீண் விமர்சனம் செய்வதில் எந்த அர்த்தமும் இல்லை என்று எதிர்க் கட்சிகளைச் சாடி அறிக்கை விடுத்துள்ளார் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார். அவர் அந்த அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளதாவது: ☞ 2

## அர்ஜுன மகேந்திரனை கைதுசெய்ய பிடியாணை

மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அர்ஜுன மகேந்திரன் மற்றும் பேர்பச்சுவல் ட்ரஷரீஸ் நிறுவனத்தின் பணிப்பாளராக செயற்பட்ட அஜான் ஹார்திய புஞ்சிஹேவா ஆகியோரை உடனடியாக கைது செய்து நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்துமாறு கொழும்பு பிரதான நீதிவான் திலின கமகே நேற்று பகிரங்க பிடியாணை ☞ 8

## வீடற்றவர்களின் தகவல் சேகரிப்பு

வருட குடிசன, வீட்டு வசதிகள் தொகைமதிப்புக்கு அமைய வீடற்றவர்களின் தகவல் சேகரிப்பு நேற்று மேற்கொள்ளப்பட்டுள்ளது.

நேற்றிரவு 10.00 மணி முதல் நள்ளிரவு 12.00 மணி வரையான ☞ 2

# சந்திரகாவின் தீர்வுப் பொதியை அநுர நிறைவேற்ற வேண்டும்

### முன்னாள் சபாநாயகர் கரு ஜெயசூரிய கோரிக்கை

**முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவால் உருவாக்கப்பட்ட தீர்வுப் பொதியில் அடங்கிய புதிய அரசமைப்பு அன்று நிறைவேற்றப்பட்டிருந்தால், இன்று நாடு பெருமளவில் முன்னேற்றமடைந்திருக்கும். தற்போதைய ஜனாதிபதியாவது அதனை நிறைவேற்றுவார் என எதிர்பார்க்கிறோம் முன்னாள் சபாநாயகர் கருஜயசூரிய தெரிவித்தார்.**

**முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்ககுமாரதுங்கவை இலக்காகக் கொண்டு கொழும்பில் தற்கொலைக் குண்டு தாக்குதல் மேற்கொள்ளப்பட்டு 25 ஆண்டுகள் நிறைவடைந்துள்ளமையை முன்னிட்டு மஹரக இந்திரா புற்றுநோய் ஒழிப்பு அமைப்பிற்கு நிவாரணங்களை வழங்கும் நிகழ்வு புதன்கிழமை இடம்பெற்றது. இந்நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றிய போது இதனைத் தெரிவித்த அவர் மேலும் தெரிவித்ததாவது:** ☞ 2

## நோர்வே தூதர் நேற்று சஜித்தை சந்தித்துப் பேச்சு



நோர்வே தூதுவர் மே-எலின் ஸ்டினர் நேற்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவை அவருடைய அலுவலகத்தில் சந்தித்துப் பேசினார்.

இலங்கையின் சமூக, பொருளாதார மற்றும் அரசியல் பிரச்சினைகள் குறித்து இந்தச் சந்திப்பில் இருதரப்பினரும் விரிவாக கலந்துரையாடினர்.

வங்குரோத்து நிலையில் இருந்து நாட்டை மீட்டெடுக்கத் தேவையான உதவிகளை வழங்குமாறும், அதற்கு எதிர்க்கட்சி என்ற முறையில் ☞ 2

## புதிய அரசமைப்பு முயற்சிகளில் சர்வதேசத் தலையீடு வேண்டும்

### கனடாவிடம் கோரிக்கை விடுத்தார் சிறீதரன் எம்.பி.



இலங்கையில் புதிய அரசமைப்பு முயற்சிகள் இடம்பெறும்போது அது காத்திரமாக மேற்கொள்ளப் படுவதற்குரிய புதுமையான சர்வதேச தலையீட்டை ஏற்படுத்த ஆவனசெய்யுமாறு நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரன் கனடாவிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

கனடிய வெளிவிகார அமைச்சின் இந்தோ-பசுபிக் பிராந்தியங்களுக்கான பிரதி அமைச்சர் வெல்டன் எப் உள்ளிட்ட கனடிய இராஜதந்திரிகளை நேற்று தலைநகர் ஒட்டாவாவில் சந்தித்துப் பேச்சு நடத்தினார் நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரன். அப்போது தனது கோரிக்கைகள் அடங்கிய கடிதம் ஒன்றையும் அவர் கையளித்தார்.

இலங்கையில் தொடர்ந்து திட்டமிட்ட இன அழிப்பு இடம்பெற்று வருகின்றது என்பதை, தந்தை செல்வாவின் காலம் தொட்டு அந்தக் கடிதத்தில் விளக்கியுள்ள நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரன், 3 கோரிக்கைகளையும் முன்வைத்துள்ளார்.

1) தலையாய சர்வதேசக் ☞ 2

## சஜித்தின் கல்வித் தகைமை சர்ச்சைகள் தொடர்கின்றன

எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தனது கல்வித் தகைமைச் சான்றிதழ்களை நாடாளுமன்றில் காட்டியபோதும் அவற்றைச் சமர்ப்பிக்கவில்லை என்று அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ நேற்றுக் குற்றஞ்சாட்டிய நிலையில் சான்றிதழ்கள் அனைத்தும் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக எதிர்க் கட்சி தெரிவித்துள்ளது .

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவின் கல்வித் தகைமைகள் தொடர்பான சான்றிதழ்கள் மற்றும் ஏனைய ஆவணங்கள் இன்று (19) காலை பாராளுமன்ற ஹன்சாட் திணைக்களத்தில் வழங்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான ஊடக அறிவித்தலை விடுத்துள்ள எதிர்க்கட்சித்தலைவர் அலுவலகம், சஜித் பிரேமதாசவினாலேயே இந்தச் சான்றிதழ்கள் மற்றும் ஏனையவற்றை வழங்குவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டதாகத் தெரிவித்துள்ளது.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவின் கல்வித் ☞ 8

## திருமலைக்கு இழுத்துச் செல்லப்படுகிறது மியான்மர் அகதிகள் அடங்கிய படகு

முல்லைத்தீவு முள்ளிவாய்க்கால் மேற்கு கடற்கரையில் கரையொதுங்கிய மியன்மார் அகதிகளைகொண்ட நாட்டுப்படகை திருகோணமலைக்கு கொண்டு செல்ல கடற்படையினர் நடவடிக் கைகளை மேற்கொண்டுள்ளனர்.

முல்லைத்தீவு முள்ளிவாய்க்கால் மேற்கு கடற்பகுதியில் நேற்றுக் காலை மியன்மார் அகதிகள் அடங்கிய நாட்டுப்படகு ஒன்று கரையொதுங்கியிருந்தது.

குறித்த படகில் சிறுவர்கள், கற்பிணிபெண் உட்பட்ட 100ற்கும் அதிகமானவர்கள் இருக்கின்றனர் என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

மியன்மாரில் நடக்கும் உள்நாட்டு யுத்தம் காரணமாக தமது உயிரைகாப்பாற்றிக்கொள்ள வேறு எந்த நாட்டிலாவது தஞ்சங்கோருவதற்கு ☞ 2

## இனி இது .....

செய்ததைப் போலவே ஆளும்தரப்பின் அமைச்சர் கலாநிதி உபாலி பன்னிலகேவின் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை செல்லுபடியற்றதாக்கிபேரணைபிறப்பிக்குமாறு கோரி மேன்முறையீட்டு நீதிமன்றில் மனுவொன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

புதியசுதந்திர முன்னியின்தலைவர் ஓஷல ஹேரத் இந்த மனுவைச் சமர்ப்பித்துள்ளார். அதில், பிரதிவாதிகளாக அமைச்சர் கலாநிதி உபாலி பன்னிலகே, நாடாளுமன்ற பொது செயலாளர், ருஹுனு பல்கலைக்கழகம் மற்றும் அதன் உபவேந்தர் ஆகியோர் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

அருச்சுனா, உபாலி இருவருக்கும் எதிராக ஒரே மாதிரியான காரணங்களைத் தெரிவித்தே இந்த வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. அருச்சுனா பொதுத் தேர்தலில் போட்டியிட்டபோது அரச மருத்துவ அதிகாரி பதவியில் இருந்து இடைநீக்கம் செய்யப்பட்டிருந்தார். ஆனாலும், அவர் அந்தப் பதவியில் இருந்து விலகாமல் போட்டியிட்டமை அரசமைப்புக்கு முரணானது என்று தெரிவித்தே வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

கடந்த பொதுத் தேர்தலின் பின்னர் அமைச்சர் கலாநிதி உபாலி பன்னிலகே தேசியப்பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினராக நியமிக்கப்பட்டார். அவர் நாடாளுமன்ற உறுப்பினராக நியமிக்கப்பட்ட போது, ருஹுனு பல்கலைக்கழகத்தில் சமூக விஞ்ஞான பேராசிரியராக பணியாற்றிக் கொண்டிருந்தார். அதனால் அவரது பதவியும் வெறிதாக்கப்படவேண்டும் என்று மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அரச சேவையில் ஈடுபட்டிருக்கும் வேளையில் இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினராக நியமிக்கப்படுவது, அரசமைப்பின் 91ஆவது பிரிவின் கீழ் சட்டத்திற்கு முரணானது எனவும் நாடாளுமன்றத்திற்கு ஒருவர் தெரிவு செய்யப்படுவதற்கான தகுதியை இழப்பதாகும் எனவும் அந்த மனுவில் சுட்டிக்காட்டப்பட்டிருந்தது.

இதன்படி, அமைச்சர் கலாநிதி உபாலி பன்னிலகேவை நாடாளுமன்ற உறுப்பினராக தெரிவு செய்தமை தவறு என்றும், நாடாளுமன்றத்தில் அமர்ந்து வாக்களிப்பதற்கும் தகுதியற்றவர் என தீர்ப்பளிக்குமாறும், அவரது நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை செல்லுபடியற்றதாக பேரணை பிறப்பிக்குமாறும் மனுதாரர் மேன்முறையீட்டு நீதிமன்றத்திடம் கோரியுள்ளார்.

இரண்டு வழக்குகளும் முடிவுக்கு வருவதற்கு எப்படியும் வருடங்கள் கடக்கும் என்பதால் இருவரும் அதுவரையிலாவது தமது பதவிகளை அனுபவிக்க முடியும்.

..............................................

தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் மாவை சோனதிராசா தனது பதவியிலிருந்து விலகுகிறார் என்று தெரிவித்து அனுப்பிய கடிதத்தை ஏற்று அதன் அடிப்படையில் கட்சி நடவடிக்கை எடுக்கக்கூடாது என்று கோரும் மனு நேற்று யாழ். மாவட்ட நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டது.

இந்த மனுவைத் தாக்கல் செய்தவர் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் கட்சியின் மத்திய குழு உறுப்பினருமான மருத்துவர் சிவமோகன். 2020 பொதுத் தேர்தலில் போட்டியிட்டுத் தோல்வி அடைந்ததைத் தொடர்ந்து கடந்த தேர்தலில் அவருக்கு போட்டியிட வாய்ப்பளிக்கப் படவில்லை. இதனால் கொதிப்படைந்திருந்த அவர் வவுனியாவில் தனக்குப் போட்டியானவர் என்று கருதும் நாடாளுமன்ற உறுப்பினரும் கட்சிச் செயலாளருமான சத்தியலிங்கத்தின் மீது கடும் கோபத்தில் இருக்கிறார்.

பொதுத் தேர்தல் காலத்திலேயே சத்திலிங்கத்திற்கு எதிராக பகிரங்கமாகச் செய்தியாளர் சந்திப்புக்களையும் நடத்திய வர். தற்போது அதற்காக கட்சியின் ஒழுக்காற்று நடவடிக்கையை எதிர்கொள்ளக் காத்திருக்கின்றார். விரைவில் அவர் மீது கட்சியின் சட்டங்கள் பாயும். வவுனியாவில் டிசெம்பர் 14 நடந்த மத்திய குழுக் கூட்டத்தில் இவர் உட்பட, பொதுத் தேர்தலில் கட்சியின் வேட்பாளர்களுக்கு எதிராகச் செயற்பட்டவர்களை கட்சியிலிருந்து இடைநிறுத்து ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பதற்கு செயலாளருக்கு தற்றுணிபு அதிகாரம் இருக்கின்றது என்று சுட்டிக்காட்டப்பட்டு அதனடிப்படையில் நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் அறிவுறுத்தப்பட்டிருந்தது.

அந்தக் கூட்டத்தில் மாவை சோனதி ராசாவைத் தலைமைப் பதவியிலிருந்து அகற்றுவதற்கு சிவமோகன் கடும் எதிர்ப்புத் தெரிவித்திருந்தார். கூட்டத்தில் தொடக்கத்தில் கட்சியின் மூத்த தலைவர் சிவஞானத்தின் தலைமையில் நிகழ்வுகளைத் தொடங்குவதற்கு எதிர்ப்புத் தெரிவித்துப் பெரும் கேள்பரங்களில் ஈடுபட்டிருந்தார். மாவை கூட்டத்திற்கு வரும் வரையில் கூட்டத்தைத் தொடக்க விடாமல் குழப்பம் விளைவித்தார்.

அவரே இப்போது மாவை தலைவராகத் தொடர்வதை கட்சி தடுக்கக்கூடாது என்று உத்தரவிடக் கோரி நீதிமன்றத்தை நாடி இருக்கின்றார். இந்த வழக்கு நேற்று எடுக்கப்பட்டபோது மாவட்ட நீதிபதி விடுமுறையில் இருந்தார் என்பதால் பதில் நீதிபதியால் ஜனவரி மாதம் 7ஆம் திகதிக்குத் தவணையிடப்பட்டது. அதனால் டிசெம்பர் 28 தமிழ் அரசுக் கட்சி, மாவையர் கட்சியின் தலைமைப் பதவியில் தொடர்வதா இல்லையா என்பது பற்றி மத்திய குழுவில் நடத்தவுள்ள வாக்கெடுப்புக்கு எந்தத் தடையும் இல்லை.

இருப்பினும் அந்த ஆபத்து முற்றிலும் நீங்கிவிட்டது என்று சொல்ல முடியாது. அவசர நிலை எனத் தெரிவித்து நகர்த்தல் பத்திரம் மூலம் விடுமுறைக் காலத்திலும் இந்த மனுவை மீண்டும் நீதிமன்றத்தின் முன்பாக வரவழைத்து தமிழ் அரசின் மத்திய குழுக் கூட்டத்திற்கு இடைக்காலத் தடை கேட்பதற்கு முடியும். அத்தகைய நகர்வுக்கு வழக்காளிகள் செல்கிறார்களா என்பதைப் பொறுத்திருந்து பார்க்கவேண்டும்.

மாவை சேனாதிராசவுக்கு ஆதரவான வழக்காக இருந்தாலும் அவரும் ஒரு எதிராளியாக இந்த வழக்கில் பெயரிடப்பட்டுள்ளார். கட்சியை மட்டுமல்ல வழக்கையும் குழப்பியடிக்காமல் விடமாட்டார் போலிருக்கிறது மாவை..

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## சந்திரகாவின் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க புதிய அரசமைப்பினை உருவாக்கி தேசிய ஒற்றுமையை ஏற்படுத்துவதற்கான முயற்சிகளை முன்னெடுத்தமையை இன்று பலரும் மறந்துள்ளனர். இதற்காக 21 கூட்டங்களை அவர் நடத்தியிருக்கின்றார். அவற்றில் நானும் பங்கேற்றிருக்கின்றேன். அந்த அரசமைப்புக்கு எந்தவொரு அரசியல்வாதியும் எதிர்ப்புத் தெரிவிக்கவில்லை.

அன்று அந்த அரசமைப்பு நிறைவேற்றப்பட்டிருந்தால் இன்று நாடு எந்த நிலைமையில் இருந்திருக்கும் என்பதை எண்ணிப்பார்க்க முடியும். அவ்வாறான புரட்சிகரமான மாற்றத்தை பொருளாதார மற்றும் சமூக ரீதியில் ஏற்படுத்தியிருக்க முடியும். ஆனால் அந்த முயற்சி நிறைவேறாது போனமை எமது நாட்டின் துரதிஷ்டமாகும். புதிய ஜனாதிபதி தற்போதாவது அதனை செய்வார் என்று நம்புகின்றோம் என்றார்.

நிகழ்வில் உரையாற்றிய முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தெரிவித்ததாவது:

கடந்த 25 ஆண்டுகளுக்கு முன்னர் இங்கு இடம்பெற்ற தற்கொலை குண்டு தாக்குதலில் 26 பேர் உயிரிழந்தனர். அவர்களில் 6 பேர் எனது பாதுகாப்பு கடமைகளில் ஈடுபட்டிருந்தவர்களாவர். அன்று உயிரிழந்தவர்களை நினைவு கூர்வதற்காக இந்த நிகழ்வு வருடாந்தம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. நோயாளர்களில் அதிகளவில் பாதிக்கப்படுவது புற்றுநோயாளர்கள் என்பதால்தான் இந்த வைத்தியசாலையை தேர்ந்தெடுத்திருக்கின்றோம்.

கடந்த 14 ஆண்டுகளுக்கு முன்னர் நானும் புற்று நோய்க்குள்ளாகி அதிலிருந்து மீண்டிருக்கின்றேன். அந்தவகையிலேயே நாம் இணைந்து இந்தப் பணியை முன்னெடுத்துக் கொண்டிருக்கின்றோம். பல தசாப்தங்களாக அரசியலில் ஈடுபட்டு தற்போது அதனை வெறுத்து அதிலிருந்து ஒதுங்கியுள்ளோம். அரசியலிலிருந்து ஓய்வெடுத்த பின்னர் நானும் முன்னாள் சபாநாயகர் கருஜயசூரியவும் மாத்திரமே மக்களுக்கான சேவைகளை முன்னெடுத்துக் கொண்டிருக்கின்றோம்.

எமது நிதியங்களில் சுயமாக வந்து பணியாற்றுவதற்கு சகலருக்கும் வாய்ப்புள்ளது. நாட்டில் புற்றுநோயால் பாதிக்கப்பட்டுள்ளவர்கள் அதிலிருந்து மீண்டு ஆரோக்கியமான வாழ்க்கைக்கு திரும்புவதற்கான பணிகளை நாம் தொடர்ந்தும் முன்னெடுப்போம் என்றார்.

# டிஜிட்டல் அபிவிருத்திக்காக இந்தியாவுடன் ஒப்பந்தம்

## ஆளும் தரப்பு அறிவிப்பு

டிஜிட்டல் அபிவிருத்திக்கான தொழில்நுட்ப அறிவைப் பெற்றுக்கொள்ள இந்தியாவுடன் ஒப்பந்தம் செய்யப்படவுள்ளதாக ஆளும்தரப்பு அறிவித்துள்ளது.

அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ நேற்று அமைச்சரவை முடிவுகளை அறிவித்தபோது ஆளும்தரப்பின் இந்த முடிவைத் தெரிவித்தார்.

தகவல் தொழிநுட்பத்தின் மற்றும் டிஜிட்டல் புத்தாக்கத்தில் முன்னணி வகிக்கின்ற இந்திய இலத்திரனியல் - அரச நிர்வாகம், நிதித் தொழிநுட்பமுறைமை, செயற்கைநுண்ணறிவு மற்றும் டிஜிட்டல் உட்கட்டமைப்பு வசதிகள் போன்ற துறைகளில் பெற்றுக் கொண்டுள்ள விசேட நிபுணத்துவ அறிவை, பல்வித செயற்பாடுகள் மூலமாக இலங்கையில் டிஜிட்டல் அபிவிருத்திக்குப் பெற்றுக் கொள்வதற்கான இயலுமை கிட்டியுள்ளது.

அதற்கமைய, இலங்கையில் டிஜிட்டல் பொருளாதாரத்தை விருத்தி செய்வதற்காக டிஜிட்டல் பொருளாதார அமைச்சு மற்றும் இந்தியாவின் இலத்திரனியல் மற்றும் தகவல் தொழிநுட்ப அமைச்சுக்கும் இடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையொப்பமிடுவதற்கு இருதரப்புக்கும் இடையிலான ஆரம்ப உடன்பாடுகள் எட்டப்பட்டுள்ளன.

அதன்மூலம், டிஜிட்டல் அபிவிருத்தித் துறையில் அதிகாரிகளின் இயலளவு விருத்திக்கும் மற்றும் டிஜிட்டல் அபிவிருத்தித் தீர்வுகளை நடைமுறைப்படுத்தும்போது இரு நாடுகளுக்கிடையிலான நிறுவன ரீதியான ஒத்துழைப்புக்களை மேம்படுத்துவதற்கான இயலுமை கிட்டியுள்ளது.

அதற்கமைய, முன்மொழியப்பட்டுள்ள ஒப்பந்தத்தில் கையொப்பமிடுவதற்கு டிஜிட்டல் பொருளாதார அமைச்சராக ஜனாதிபதி சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

## திருமலைக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குறித்த மக்கள் நாட்டுப்படகில் புறப்பட்டுள்ளனர்.

இந்நிலையில் தற்போதைய காலநிலை காரணமாக காற்று இழுவை அதிகமாக இருந்ததனால் படகு இலங்கையை நோக்கித் தள்ளப்பட்டதன் காரணமாகவே குறித்த கப்பல் முள்ளிவாய்க்காலில் கரையொதுங்கியுள்ளது.

படகில் இருப்பவர்கள் சுமார் பத்து நாட்களாக கப்பலில் இருந்ததனால் உணவுகள் எதுவும் இன்றி அவதிப்பட்டுள்ளனர், சிலர் மயக்கமும் அடைந்துள்ளனர்.

கரையொதுங்கிய இந்தப் படகு குறித்து கடற்படையினருக்கு அறிவிக்கப்பட்டமையை அடுத்து மேலதிக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

படகில் இருந்த அகதிகளுக்கு மீனவ அமைப்புக்கள், அந்தப் பகுதி மக்களால் உலருணவுப் பொருட்கள், உணவுகள் வழங்கப்பட்ட நிலையில் இராணுவத்தினர் மதிய உணவு வழங்கினர்.

குறித்த நாட்டுப்படகை கரைக்கு கொண்டு வரமுடியாத நிலையில் கடற்படையினரின் கப்பல் உதவியுடன் அதனை திருகோணமலைக்கு கொண்டு செல்ல நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

## நோர்வே....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதற்காக முழு ஆதரவைத் தாம் வழங்கி வருகின்றார் என்றும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச நோர்வே தூதுவரிடம் தெரிவித்தார்.

## ஜனாதிபதி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அநுரகுமார திசாநாயக்க இன்று 'எட்கா' ஒப்பந்தத்தை ஏற்றுக்கொள்வதற்கான காரணம் என்னவென்பதை மக்களுக்குத் தெளிவுபடுத்தவேண்டும்.

'எட்கா' ஒப்பந்தம் தொடர்பில் ஜனாதிபதி பொய் உரைத்திருந்தால் அதற்கு அவர் மக்களிடம் பகிரங்க மன்னிப்புக் கோரவேண்டும் அல்லது ஒப்பந்தத்தை ஏற்றுக்கொள்வதற்கான காரணத்தை மக்களுக்கு தெளிவுபடுத்தவேண்டும்.

'எட்கா' ஒப்பந்தம் ஆரம்பத்தில் 'சீபா' என்ற பெயரில் இலங்கைக்கு அறிமுகமானது. 2008ஆம் ஆண்டு காலப்பகுதியில் இந்திய பிரதமர் மன்மோகன் சிங் இலங்கைக்கு 'சீபா' ஒப்பந்தத்தில் கைச்சாத்திடுவதற்காக வருகை தந்திருந்தார். 'சீபா' ஒப்பந்தத்துக்கு எதிராக நாட்டு மக்கள் கடுமையான எதிர்ப்பை வெளிப்படுத்தியதைக் கருத்திற்கொண்டு முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச அந்த ஒப்பந்தத்தில் கைச்சாத்திடவில்லை.

2015ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்த நல்லாட்சி ஆளும்தரப்பு 'எட்கா' ஒப்பந்தத்தில் கைச்சாத்திடுவதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்தபோது கூட்டு எதிர்க்கட்சியாக கடுமையான எதிர்ப்பை வெளிப்படுத்தினோம். மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் ஜனாதிபதி அநுரகுமார திசநாயக்கவும் கடுமையான எதிர்ப்பை வெளிப்படுத்தியிருந்தார்.

பொருளாதார முன்னேற்றத்துக்கு இருதரப்பு ஒப்பந்தங்கள் அத்தியாவசியமானவை. இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் கைச்சாத்திடுவதற்கு உத்தேசித்துள்ள 'எட்கா' ஒப்பந்தத்தின் உள்ளடக்கம் பாரதூரமானது. இலங்கையின் தேசிய உற்பத்தி, தொழிற்றுறை, ஊழியர் படைகளுக்கு ஏற்படும் பாதிப்பு தொடர்பில் கடந்த 10 ஆண்டுகாலமாக பேசப்படுகிறது.

'எட்கா' ஒப்பந்தத்தால் இலங்கைக்கு ஏற்படும் விளைவுகளை எடுத்துரைத்துள்ள நிலையிலும் அந்த ஒப்பந்தத்தை கைச்சாத்திட ஜனாதிபதி முயற்சிப்பது நாட்டை அழிவுப்பாதைக்கு தள்ளும் செயற்பாடாகும்.

இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் பௌதீக தொடர்பு, எரிசக்தி மற்றும் மின்சக்தி தொடர்பு குறித்து முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கைச்சாத்திட்ட ஒப்பந்தங்களை ஜனாதிபதி அநுரகுமார திசநாயக்க ஜனாதிபதித் தேர்தலின்போது கடுமையாகச் சாடினார்.

நாட்டின் சுயாதீனம் மற்றும் பாதுகாப்பை கருத்திற்கொண்டே நாட்டு மக்கள் அநுரகுமார திசநாயக்கவை ஜனாதிபதியாகத் தெரிவு செய்தார்கள். தேர்தல் காலத்தில் வழங்கிய வாக்குறுதிகளுக்கு அமையவாகவா செயற்படுகின்றீர்கள் என மக்கள் ஜனாதிபதியிடம் கேள்வியெழுப்ப வேண்டும் என்றார்.

## புதிய....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குற்றமான இன அழிப்புத் தொடர்பான பொறுப்புக்கூறல்

2) இதர சர்வதேசக் குற்றங்களான போர்க்குற்றங்கள், மனிதத்துவத்துக்கு எதிரான குற்றங்கள், சித்திரவதை, வலிந்து காணமலாக்கப்பட்டமை ஆகியவை பற்றிய பொறுப்புக்கூறல்

3) மேற்குறித்த குற்றங்கள் மீள்நிகழாமையை உறுதிப்படுத்தும் வகையில் பலபத்தாண்டுகளாகத் தீர்க்கப்படாது புரையோடிப்போயிருக்கும் தேசியப் பிரச்சினைக்கான தீர்வை, குறிப்பாகத் தமிழ் பேசும் மக்களின் தனித்துவமான சுயநிர்ணய உரிமையை உறுதிப்படுத்தும் கூட்டாட்சி அரசியலமைப்பொன்றை ஏற்படுத்துவதும் பொறுப்புக்கூறலின் முக்கிய பெறுபேறாக அமையவேண்டும்.

என்று கேட்டுள்ள அவர், மேற்குறித்த மூன்று முனைகளில் அர்த்தமுள்ள வகையில் பொறுப்புக்கூறலை முன்னெடுப்பதிலும் மீள் நிகழாமையை உறுதிப்படுத்துவதிலும் பெருந்தொகையாகப் புலம்பெயர்ந்து ஈழத்தமிழர்கள் வாழும் நாடுகளில் முதன்மையான நாடான கனடா நாடானது பின்வரும் வழிகளில் காத்திரமாக உதவவேண்டும் என்று அனைத்து ஈழத்தமிழர் மற்றும் தமிழ் பேசும் மக்கள் சார்பாகவும் வேண்டி நிற்பதாகவும் தெரிவித்துள்ளார்.

1. தலையாய பொறுப்புக்கூறலுக்குரிய தமிழ் இன அழிப்புக் குற்றம் தொடர்பான இலங்கையின் அரச பொறுப்பை விசாரணைக்கு உட்படுத்துமாறு சர்வதேச நீதிமன்றை அணுகுதல்.

மியான்மார் நாட்டில் றொஹின்யா மக்கள் மீது இன அழிப்பு மேற்கொண்டதில் மியான்மார் அரசுக்குப் பொறுப்பு உள்ளதா என்பதை உலக நீதிமன்று விசாரிக்கவேண்டும் என்று வழக்குத் தொடர்வதற்கு கனடா நாடு அனுசரணையாக இருந்துள்ளது பாராட்டத்தக்கது. அதுமட்டுமன்றி, தனது

தொடர்ச்சி 8ம் பக்கம்....

காலைக்கதிர் Kalaikkathir

# அட்டாளைச்சேனை தேசிய கல்வியியற் கல்லூரிக்கு கல்வி அமைச்சு பிரதம ஆணையாளர் குழு வருகை

(றமீஸ்)

கல்வி அமைச்சின் ஆசிரியர் கல்விக்கு பொறுப்பான பிரதம ஆணையாளர் திருமதி பீ.ஜீ.ஐ. களனி ஹேமமாலி மற்றும் கல்விக்கல்லூரியின் பிரதி பணிப்பாளர் திருமதி எம். சுமந்தகுமாரி ஆகிய குழுவினர் உத்தியோகபூர்வமான மேற்பார்வையின் பொருட்டு புதன்கிழமை அட்டாளைச்சேனை தேசிய கல்விக் கல்லூரிக்கு விஜயம் செய்து பார்வையிட்டனர்.







இதன் போது ஆசிரியர் பயலுனர்களுக்கும், விரிவுரையாளர்களுக்கும், கல்வி சாரா உத்தியோகத்தர்களுக்கும் தேவையான ஆலோசனை வழங்கியதுடன் கல்விக்கல்லூரியின் எதிர்கால விருத்திக்காக தனது முழுமையான பங்களிப்பினையும் வழங்குவதாக உறுதியளித்தார்.

இந்நிகழ்வின் கல்லூரியின் பீடாதிபதி சட்டத்தரணி கே. புண்ணியமூர்த்தி உட்பட உப பீடாதிபதிகள், விரிவுரை இணைப்பாளர்கள், விரிவுரையாளர்கள் கல்விசாரா உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

### அம்பாறை பிரதேச மட்டங்களில்

# கலை, இலக்கிய போட்டிகளில் வெற்றிபெற்றோருக்குப் பரிசு

கலாசார அலுவல்கள் திணைக்களத்தால் நடத்தப்படுகின்ற தேசிய இலக்கிய விருது வழங்கல் விழாவின் ஆரம்பக்கட்டமாக அம்பாறை மாவட்டத்தின் அனைத்து பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் நடாத்தப்பட்ட கலை இலக்கிய போட்டிகளில் பங்குபற்றி வெற்றியடைந்த போட்டியாளர்களில் மாவட்ட மட்ட போட்டிகளில் பங்குபற்றி அதில் வெற்றியீட்டிவர்களுக்கான சான்றிதழ் மற்றும் பரிசில் வழங்கி வைக்கும் நிகழ்வு மாவட்ட கலாசார உத்தியோகத்தர் ரீ.எம். ரிம்ஸான் தலைமையில் காரைதீவு பிரதேச செயலக கலாசார பிரிவின் ஒழுங்கமைப்பில் பிரதேச செயலக கூட்ட மண்டபத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வுக்கு பிரதம அதிதியாக அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் எஸ்.ஜெயராஜன் கலந்து கொண்டு கலைஞர்களை பாராட்டி கௌரவித்தார்.



மேலும் விசேட அதிதியாக காரைதீவு பிரதேச செயலாளர் ஜீ. அருணனும் சிறப்பு அதிதிகளாக காரைதீவு உதவிப் பிரதேச செயலாளர் எஸ். பார்த்திபன் மற்றும் நிர்வாக உத்தியோகத்தர் ரீ.கமலநாதனும் கலந்துகொண்டு வெற்றி அடைந்தவர்களுக்கான சான்றிதழ் மற்றும் பரிசுகள் வழங்கி வைத்தனர்.

மேற்படி போட்டியில் 6 பிரிவுகளில் தெரிவு செய்யப்பட்ட சுமார் 80 போட்டியாளர்கள் கௌரவிக்கப்பட்டனர்.



### இந்த ஆண்டில் மட்டும்

# வவுனியாவில் மாரடைப்பால் 45 பேர் உயிரிழந்த பரிதாபம்

வவுனியா பொது வைத்தியசாலையில் இவ்வாண்டு ஜனவரி முதல் ஒக்ரோபர் வரையுமான 10 மாத காலப்பகுதியில் மாரடைப்பால் 45 பேர் மரணம் அடைந்திருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வவுனியா சுகாதார திணைக்களம் இதனைத் தெரிவித்துள்ளது.

மாரடைப்பால் இறந்தவர்கள் தொடர்பில் கேட்டபோதே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன் பிரகாரம் 20 வயது தொடக்கம் 40 வயது வரையானவர்களில் ஒருவரும் 40 தொடக்கம் 60 வயது வரையானவர்களில் 13 பேரும் 60 தொடக்கம் 100 வயது வரையானவர்களில் 31 பேருமாக 45 பேர் இவ்வாறு மாரடைப்பால் மரணமாகியுள்ளனர்.

அண்மைக்காலமாக வவுனியாவில் மாரடைப்பால் மரணிப்போரின் தொகை அதிகரித்து காணப்பட்ட நிலையில் அதற்கான பல்வேறு காரணங்களும் சுகாதார திணைக்களத்தால் தெரிவிக்கப்பட்டுள்ளது. 100

# சந்திரிகா காலத்தில் ஜனாதிபதி நிதியத்திடம் இருந்து பணம் பெற்றோர் பட்டியலும் விரைவில் வெளிவரும்

### அமைச்சரவைப் பேச்சாளர் கூறுகிறார்

ஜனாதிபதி நிதியத்திடமிருந்து முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க ஆட்சி காலத்திலும் பலர் லட்சக்கணக்கான நிதியைப் பெற்றிருக்கின்றனர். அது தொடர்பான ஆவணங்களையும் விரைவில் நாட்டுக்கு வெளிப்படுத்தவுள்ளதாக அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

வாராந்த அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாடு வியாழக்கிழமை இடம்பெற்றபோது இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில் -

1978 ஆம் ஆண்டு ஜனாதிபதி நிதிய சட்டத்தின் கீழ் 5 கட்டங்களின் கீழ் நிதியை வழங்குவதற்கு வாய்ப்புள்ளது. அதில் இறுதித் தொகுதியில் சபையால் தீர்மானிக்கப்படுபவர்களுக்கு வழங்க முடியும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் கடந்த காலங்களில் உண்மையான தேவைகளுக்காக இந்த நிதி வழங்கப்பட்டுள்ளது என நாம் நம்பவில்லை.

நாட்டிலுள்ள சாதாரண மக்கள் ஏதேனும் சத்திர சிகிச்சைகளை மேற்கொண்டால் அதற்காக ஜனாதிபதி நிதியத்திடமிருந்து சுமார் 2 லட்சம் ரூபாவை பெற்றுக்கொள்வதற்கு கூட பாரிய சிரமங்களை எதிர்கொள்ள வேண்டியேற்படும். பெரும்பாலான சந்தர்ப்பங்களில் கோரப்படும் நிதி கிடைப்பதுமில்லை. ஆனால், என்னால் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணத்தைப் பார்க்கும்போது முற்றிலும் தலை கீழான நிலைமையே காணப்படுகிறது.

2005 - 2024 வரையான பட்டியலையே நான் முன்வைத்திருக்கிறேன். இதற்கு முன்னர் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க ஆட்சி காலத்திலும் இவ்வாறு பலர் நிதியைப் பெற்றுள்ளனர். என்னால் முன்வைக்கப்பட்ட ஆவணங்கள் தவிர, பிரதேச சபை உறுப்பினர்கள், தலைவர்கள், மாகாண சபை உறுப்பினர்கள் உள்ளிட்ட பல்வேறு தரப்பினரும் ஜனாதிபதி நிதியத்திலிருந்து நிதியைப் பெற்றுள்ளனர்.

இது உண்மையில் ஒழுக்கத்துடன் தொடர்புடைய பிரச்சினையாகும். ஒரு சிலருக்கு சுமார் 100 லட்சம் ரூபா என்ற பாரிய தொகை கூட கட்டம் கட்டமாக அன்றி நேரடியாக முழுமையாக வழங்கப்பட்டுள்ளது. அதிகாரத்தை தம்வசம் வைத்திருந்தவர்கள் அதனை பயன்படுத்திக் கொண்டு இவ்வாறு செயற்பட்டிருக்கின்றனர். இது தொடர்பில் மேலும் பல ஆவணங்களை தேட வேண்டியுள்ளது. அதற்கான விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டிருக்கின்றன. வெகு விரைவில் இதனை விடத் தெளிவாக மேலும் பல ஆவணங்களை வெளிப்படுத்துவோம். - என்றார்.

காலைக்கதிர் Kalaikkathir

நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

தொலைபேசி - 021 222 3000

மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com

இணையம் - onlinekathir.com

# விழிப்படையவேண்டும்

உப்புப் பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதற்காக உப்பு இறக்குமதிசெய்வதற்குஅமைச்சரவைஅனுமதிஅளித்துள்ளது. அமைச்சரவைப் பேச்சாளர் நளிந்த ஜயதிஸ்ஸ இந்தத் தகவலைத் தெரிவித்திருக்கிறார். அமைச்சரவை முடிவுகளை அறிவித்தபோது அவர் இதனைத் தெரிவித்தார்.

ஒட்டுமொத்த நாடும் கடலால் சூழப்பட்ட அதுவும் உப்புச் செறிவு அதிகமுள்ள கடலால் சூழப்பட்ட ஒரு நாடு உப்பை இறக்குமதி செய்யவுள்ளது என்பது ஆச்சரியமூட்டும் செய்தியாக இருந்தது. பொருளாதாரப் பின்னடைவுகள், சரிவுகளுக்குப் பின்னும் உள்ளூர் உற்பத்திகளை மேம்படுத்துவதில் ஆளும்தரப்புக்களின் செயற்றிறனின்மையின் வெளிப்பாடாக இதனை நோக்கும்போது வெறுப்பூட்டும் விசனத்தையும் இது ஏற்படுத்தியது.

இலங்கையின் உப்பு உற்பத்தி நாட்டின் வீட்டுத் தேவைகளுக்கும் மற்றும் கைத்தொழில் தேவைகளுக்கும் நிலவும் கேள்வியைப் பூர்த்தி செய்வதற்காக போதுமானது. உபரியாக உப்பை உற்பத்தி செய்வதற்கான தகைமையையும் கொண்டுள்ளது. இருப்பினும் உப்பு விளைச்சல் குறிப்பாக காலநிலையில் தங்கியுள்ளது. இந்த ஆண்டு நாட்டில் நிலவிய மோசமான காலநிலை காரணமாக 2025 ஆண்டின் முதலாம் காலாண்டில் உள்நாட்டு சந்தையில் வீட்டுத் தேவைகளுக்கும் மற்றும் கைத்தொழில் தேவைகளுக்கான உப்பு விநியோகத்தில் பற்றாக்குறை ஏற்படலாமென அவதானிக்கப்பட்டுள்ளதை அடுத்தே உப்பை இறக்குமதி செய்வதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக ஆளும்தரப்புத் தெரிவிக்கின்றது.

அதற்குத்தீர்வாகதயார்செய்துசந்தைக்குவிநியோகிப்பதற்கான தீர்வைவரிவீதத்திற்கமையபதனிடப்படாதஅயடின்சேர்க்கப்படாத 30,000 மெட்ரிக் தொன் உப்பை இறக்குமதி செய்ய அனுமதி வழங்குமாறுஉப்புஉற்பத்தியாளர்கள்கோரிக்கைவிடுத்துள்ளார்கள். அதற்கமைய, பதனிடப்படாத அயடின் சேர்க்கப்படாத 30,000 மெட்ரிக் தொன் உச்ச அளவுக்கு உட்பட்ட உப்பை 2025 தை மாதம் 31ஆம் நாள் அல்லது அதற்கு முன்னர் வரையறுக்கப்பட்ட இலங்கை அரச வர்த்தக (பலநோக்கு) கூட்டுத்தாபத்தின் மூலம் இறக்குமதி செய்து உள்நாட்டு உப்பு உற்பத்தியாளர்கள் ஊடாக சந்தைக்கு வழங்குவதற்கு வர்த்தக, வாணிப, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அமைச்சர், கைத்தொழில் மற்றும் தொழில்முயற்சி அமைச்சர் ஆகியோர் இணைந்து சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

இலங்கையின் பொருளாதாரத்தில் இறக்குமதிக்காக அதிகளவில்டொலர்கள்செலவிடப்படுவதேநெருக்கடிகளுக்கான காரணம்என்று கடந்த இரண்டு ஆண்டுகளில் ஆளும்தரப்புக்கள் திரும்பத் திரும்பச் சொல்லி வந்துள்ளன. இதன் காரணமாகவே சிறுதானியங்கள்முதல்பெருவாகனங்கள்வரைஇறக்குமதிக்குத் தடை விதிக்கப்பட்டது. எனினும் இப்போது மிக இலகுவாக, தாராளமாக உற்பத்தி செய்யக்கூடிய உப்பையும் இறக்குமதி செய்யவேண்டிய நிலைக்கு இலங்கை நகர்ந்திருப்பது அதன் திட்டமிடல், ஒருங்கிணைப்புத் திறன்களின் மீது கேள்வியை எழுப்புகின்றது.

30 ஆயிரம் மெற்றிக் தொன் உப்பைக் கொள்வனவு செய்வதன் மூலம் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டுவிடப்போவதில்லை என்றாலும்கூட, முன்கூட்டிய திட்டமிடல் மற்றும் அனைத்துத் துறைகளையும் ஒருங்கிணைப்பதில் உள்ள பற்றாக்குறை அல்லது இயலாமை குறித்து விழிப்படையவேண்டியதையும் அவற்றை நிவர்த்திக்க நடவடிக்கை எடுக்கப்படவேண்டியதையும் இந்த விடயம் குறித்து நிற்கின்றது என்பதே இங்கு முக்கியமாகக் கவனிக்கப்படவேண்டியது.

உப்பு உற்பத்தி காலநிலையுடன் தொடர்புபட்டது என்பது முன்பே தெரிந்திருக்கும் நிலையில், காலநிலை முன்னறிவிப்பிற்கும் அதற்கேற்ப தேவையான உப்பை உற்பத்தி செய்வதற்கும் தேவையான திட்டமிடலும் ஒருங்கிணைப்பு இன்மையும் பொருளாதார மீட்சியின் மீதும் கணிசமான தாக்கத்தைச் செலுத்தும் என்பது வெளிப்படையானது. எனவே இந்த விடயத்தை மிகச் சிறியதாகக் கருதிக் கடந்துசெல்லாமல், ஒவ்வொரு சின்னச் சின்ன விடயங்களும் பொருளாதாரத்தின் மீது ஏற்படுத்தக்கூடிய தாக்கங்களைக் கணித்துச் சரியான திட்டமிடலுக்குச் செல்வதும் அதற்கேற்ப அனைத்துத் துறைகளையும் ஒருங்கிணைத்துப் பணியாற்றுவதற்கான பொறிமுறைகளை உருவாக்குவதும் காலத் தேவை என்பதை ஆளும்தரப்பு புரிந்துகொள்ளவேண்டும்.

# டைனமிக் அரசியல் அமைப்பு

**என். சத்திய மூர்த்தி**

ஜனாதிபதி அனுரகுமார திசநாயக்கவின் இந்தியப்பயணம்வெற்றியாகமுடிந்திருக்கிறது என்று இரு தரப்பினரும் தெளிவுபடுத்தி உள்ளார்கள். பொருளாதாரம் மற்றும் வளர்ச்சி திட்டங்கள், அயலுறவு மற்றும் பாதுகாப்பு துறைகளில் ஜனாதிபதியும் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியும் முன்னெடுத்துள்ள முடிவுகள் எதிர்காலத்தில், இரு நாடுகளுக்கும் இடையேயான உறவையும்நல்லெணத்தையும் மேலும் உறுதி செய்யும் என்று கருத இடமிருக்கிறது.



ஆனால், இலங்கையில் தமிழர் தரப்பை பொறுத்தவரை, இவை அனைத்துமே இரண்டாவது அல்லது மூன்றாவது பட்சமே. அவர்களுக்கு, புது டெல்லி பேச்சுக்களில் இனப்பிரச்சினையும் அது சார்ந்த அரசியல் தீர்வு குறித்தும் என்ன விவாதிக்கப்பட்டது, என்னன்னெ முடிவுகள் எடுக்கப்பட்டன என்பதே முக்கியம். மற்ற அனைத்துவிடயங்களையும்அவர்கள்வழமை போலவே பின் தள்ளியே பார்க்கிறார்கள்.

இரு தரப்பு பேச்சுக்களுக்கு பின்னர், குறிப்பாக மோடி, தமிழர் என்று வார்த்தை பிரயோகம் இல்லாமலே, அவர்களது எதிர்பார்ப்புகளுக்கு புதிய இலங்கை அரசு முகம் கொடுக்கவேண்டும் என்று கூறினார். ஜனாதிபதி அனுர, இனப்பிரச்சினை குறித்தோ, அரசியல் தீர்வு குறித்தோ, ஒரு வார்த்தை கூடப் பேசவில்லை என்று பத்திரிகை செய்திகளில் இருந்து கூறமுடியும்.

அதைவிட முக்கியமாக, முப்பத்திநான்கு பத்திகள் கொண்ட இருதரப்புகூட்டறிக்கையில், அரசியல் தீர்வு குறித்து (மட்டும்) ஒரு வார்த்தைகூட இருக்கவில்லை. ஏன், இந்தியா காரணமாகமுன்னெடுக்கப்பட்டபதிமூன்றாவது திருத்ததீர்வுதிட்டம்குறித்தும்ஒருவார்த்தைகூட இல்லை. இதனைக் குறிப்பிட்டு இங்கு பல தலைவர்களும் கருத்தியலாளர்களும் விமர்ச்சனங்களைமுன்வைப்பார்கள். அதிலும் குறிப்பாக, இலங்கை அரச தலைமையைவிட, இந்தியாவையே அதிகம் விமர்சிப்பார்கள். அதுதான் வழமையும்கூட.

அதேசமயம். ஒரு சிலராவது, கூட்டறிக்கை குறித்து எல்லாம் குழப்பாமல், மோடி கூறிய கருத்துக்களுக்கு மட்டும் கண் வைத்து, காது வைத்து, மகுடம் சூட்டி மகிழ்கிறார்கள். அவர்களைப்பொறுத்தவரையில், இந்தியாவும் பிரதமர் மோடியும், தற்போதைய சூழலில் தங்களால் இயன்ற அளவிற்கு அநுர தலைமைக்கு அழுத்தம் கொடுத்துள்ளார்கள். இதுவே, உண்மையும் கூட.

குறிப்பாக தமிழ் அரசு கட்சியின் பவள விழா நிகழ்ச்சியில் யாழ்பாணத்தில் தந்தை செல்வாவின் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்துவிட்டு பேசிய சுமந்திரன், இனப்பிரச்சினை குறித்து குறிப்பாக மூன்று விடயங்களில் ஜனாதிபதி அநுராவுக்கு அழுத்தம் கொடுத்தமைக்கு, இந்திய பிரதமர் மோடிக்கு நன்றி தெரிவித்துள்ளார். சுரேஷ் பிரேமசந்திரனோ, ’ஜனாதிபதியின் இந்தியப் பயணம்,தமிழர்களுக்குவிடிவைஏற்படுத்துமா?” என்று கேள்வி எழுப்பி உள்ளார்.

**சுயரூபம்**

வழமையாக இலங்கை ஜனாதிபதியின் இந்திய பயணத்திற்கு பல நாட்கள் முன்னரே, இங்கே தமிழர் அரசியல் சூடு பிடித்துவிடும். குறிப்பாகசமூகவலைதளங்களில்,பெரும்பாலும் புலம்பெயர்ந்தோரால் இந்தியா தூற்றப்படும். அதனை ஒட்டி, ’பழைய பாவங்களில்’ இருந்து இந்தியா விமோசனம் (?) பெற, தமிழர் தரப்பு கோரிக்கைகளைசெயல்படுத்த இலங்கைஅரச தலைமைக்கு அழுத்தம் கொடுக்கவேண்டும் என்று விவாதம் தொடரும்.

ஒரு கட்டத்தில், இவர்களிடமிருந்து தமிழ் அரசியல் தலைமைகள், அவர்களது கோரிக்கைகளைமட்டும்பிடித்துக்கொள்வார்கள். அல்லது,பறித்துக்கொள்வார்கள்.முன்பெல்லாம் தனியாவர்தனம்வாசித்துவந்ததமிழ்அரசியல் தலைமைகள், பலவீனப்பட்டுபோன தங்களது ஆதரவின்மையை மனதில் கொண்டு, கூட்டாக இந்திய பிரதமருக்கு கடிதம் எழுதுவார்கள்.

இது குறித்த பலத்த சர்ச்சைகள் பத்திரிகைகள் வாயிலாகவும் தமிழர் தலைவர்களுக்கு இடையேயான பேச்சுக களிலும் வெளிப்படும். தனித்தனியாகவோ கூட்டாகவோ அவர்கள் இந்திய பிரதமருக்கு எழுதிய கடிதங்கள் அவரை சென்றடையும் முன்னரே, இந்தியா குறித்த அவர்களது சுயரூபம் வெளிப்பட்டிருக்கும்.

ஆனால், இந்த முறை நிலைமை வேறு. நாடாளுமன்ற தேர்தலில் பலத்த அடி வாங்கிய இந்த கட்சிகள் அந்த அதிர்ச்சியில் இருந்து இன்னமும் முழுவதுமாக மீளவில்லை. அதிலும் குறிப்பாக, வட மகாணத்திலும் தமிழர்களின் உணர்வுபூர்வமான தலைநகர் யாழ்பாணத்திலும் ஆளும் தேசிய மக்கள் சக்தி (ஜேவிபி) பெற்ற வெற்றி, அவர்களை நிலைகுலைய வைத்திருக்கிறது.

இதனைத் தொடர்ந்தே, தமிழர் ஒற்றுமை குறித்து தனித்தனியா கஜேந்திரகுமாரும் செல்வம் அடைக்கலநாதனும் பேசத் தொடங்கினர். இருவரும் சந்தித்துப் பேசினர். அது போன்றே கஜன், தமிழ் அரசு கட்சியின் சிறீதரனையும் சந்தித்துப் பேசினார்.

இதில், சிறீதரனோ அரசியல் கூட்டு போன்ற விடயங்களை கட்சியின் மத்திய அல்லது அரசியல் குழுவே கூடி பேசி முடிவு செய்யும் என்று அறிவித்து விட்டார். இந்த விவாதங்களில் அழையா விருந்தாளியாக நுழைந்த சுமந்திரன், தமிழ் அரசுக் கட்சியின் கொள்கைகளை ஏற்றுக்கொள்பவர்கள் தங்களுடன் இணைந்து செயலாற்றலாம் என்று கூறினார். எதிர்பார்த்தது போல் செல்வம் சுமந்திரனின் கருத்தை ஏற்கவில்லை.

இது போதாது என்று, எழுபத்தைந்தாவது ஆண்டை எட்டியுள்ள தமிழ் அரசு கட்சியின் உள்குத்துக்கள் ஒரு நாளைவிட அடுத்த நாள் படு கேவலமாகத் தொடர்ந்து வருகிறது. மீண்டும் மாவை சேனாதிராஜா கட்சியின் தலைவரா, என்றகேள்விகுறித்துதமிழ்அரசின் மத்திய குழு ஐந்தாறு மணித்தியாலங்களை வீணாக்கியதை தவிர தீர்வு எதுவுமில்லை. இது குறித்த வாக்கெடுப்பு தனியாக நடத்தப்பட உள்ளது. அதற்கிடையில் என்னவெல்லாம் கூத்துக்கள் அரங்கேற உள்ளன என்பது ஆண்டவனுக்கே வெளிச்சம்.

**முரண்பாடு**

இந்தப் பின்னணியில், கஜேந்திரகுமார் மட்டுமே பிரதமர் மோடிக்கு கடிதம் எழுதி

தொடர்ச்சி 5ம் பக்கம்..........

காலைக்கதிர் Kalaikkathir

# டைனமிக்......

4ம் பக்கத் தொடர்ச்சி...........

இருந்தார். அதில், தமிழர் மற்றும் இலங்கை அரசியலில் அரங்கேறி உள்ள மாற்றங்களை அவர் கருத்தில் கொள்ளவில்லை.

மாறாக, வழமையான தனது கடிதத்தின் புதிய நகலை, புதிய தேதியிட்டு அவர் அனுப்பினார் என்றே கூறவேண்டும். எப்போதும் போல், தனது கட்சியின் நிலைப்பாட்டை ஒட்டி, 'சுயநிர்ணயத்திற்கு உள்பட்ட சமஷ்டி தீர்வு' என்ற வாதத்தை மீண்டும் முன்னிறுத்தினார். மற்றவர்களோ, அதைகூடச் செய்ய திராணி இல்லாதவர்களாக இருந்தார்கள்.

அதற்காக கஜன் கூறியது எல்லாம் வேதவாக்கு அல்ல. குறிப்பாக அவர் கோரும் 'சுயநிர்ணயத்திற்கு உள்பட்ட சமஷ்டி' தீர்வு என்பது வாதத்திற்கு வழிவகுக்காது. மாறாக விதண்டாவாதமாகவே முடியும். என்ன, இது குறித்த வாதத்தை இதுவரை யாரும் அவருடன் முன்னெடுக்கவில்லை என்பதே உண்மை.

கஜேந்திரகுமார் பிரயோகப்படுத்திவரும் சொற்தொடர்களில் உள்ள முரண்பாட்டை அவர் உணர்ந்தாரில்லை. அவர் கோருவது போல், சமஷ்டி தீர்வை தென்னிலங்கை தலைமைகளும் இலங்கை அரசும் ஏற்றுக்கொண்டு விட்டால், அதன் பின்னர் எதற்காக சுயநிர்ணய உரிமை?

இவ்வாறான வாதமே, சமஷ்டி அளித்தாலும் தமிழர் தரப்பு அதற்கு அப்பாலும் ஏதோ எதிர்பார்க்கிறது என்ற எண்ணத்தை தோற்றுவிக்கிறது. எதிர்காலத்தில் இது 'பிரிவினை' என்ற வாதத்தில் சென்று முடியும் என்று இதனையே தென்னிலங்கை கருதுகிறது. அவ்வாறாயின், எந்தவொரு தென்னிலங்கை அமைப்பும் அரசும் சமஷ்டி தீர்வையோ, சுயநிர்ணய உரிமையையோ கனவிலும் ஏற்றுக்கொள்ளாது.

### ஆற்றில் ஒரு கால்...

இந்தியாவின் தற்போதைய பிரச்சினையே, தமிழ் அமைப்புகள் சமஷ்டிக்கும் பதிமூன்றாவது திருத்தத்திற்கும் மாறிமாறித் தாவுவதுதான். அரசியல் மற்றும் அரசமைப்பு ரீதியாக, இந்தியாவின் பங்களிப்பு என்பது பதிமூன்றாவது தீர்வுத் திட்டத்துடன் முடிந்துவிடுகிறது. அதில் சமஷ்டிக்கு இடமில்லை. எனவே, சமஷ்டி குறித்தோ, சுயநிர்ணயம் குறித்தோ இலங்கை அரசிற்கு இந்தியா அழுத்தம் கொடுக்கவே முடியாது. மாறாக, பதிமூன்றை முழுமையாக செயல்படுத்த வேண்டும் என்றே இந்தியா கோரமுடியும்.

இந்த உண்மையை புரிந்தும் புரியாத மாதிரியே தமிழ் தலைவர்கள் அரசியல் செய்து வருகிறார்கள். இதில் அரசியல் அனுபவம் மிக்க காலம் சென்ற சம்மந்தனும், மெத்தப்படித்த சுமந்திரன், கஜேந்திரன் போன்றோரும் உள்ளடங்குவர்.

இந்த உண்மையும் தங்களது இந்தியா சார்ந்த அரசியல் முரண்பாடும் குறித்து அறிந்திருந்ததால் தான், பெரும்பாலும், கஜேந்திரகுமார், இந்தியாவை வம்புக்கு இழுக்காமல் இதுநாள் வரை இருந்தார். ஆனால், சுமந்திரன் மட்டும் எப்போதுமே ஆற்றில் ஒரு கால், சேற்றில் ஒரு கால் என்றே இருந்திருக்கிறார்.

இந்த முறையும் கஜேந்திரகுமார் முன்னெடுப்பு, ஒப்புக்குச் செய்யப்பட்டதாகவே கருதவேண்டும். உண்மையிலேயே அவர் இந்தியாவின் பங்களிப்பை எதிர்பார்த்திருந்தால், ராஜீவ் – ஜே.ஆர்–ஜெயவர்தனே ஒப்பந்தம், அது சார்ந்த பதிமூன்றாவது திருத்தம் ஆகியவற்றிற்கு அப்பால் பயணித்திருக்கமாட்டார்.

### தற்போதைய நிலைமை

இப்போது களநிலைமையே வேறு. பிரதமர் மோடியின் தற்போதைய கருத்துக்களுக்கு அப்பாலும் சென்று, இந்தியா இலங்கைக்கு அழுத்தம் கொடுத்திருந்தாலும், ஜனாதிபதி அநுரவிற்கு அதற்கு ஏற்ற பதிலை கொடுப்பது அவரது முன்னோடிகளை விட சுலபமான விடயமாகி விட்டது.

தான் புதிய அரசமைப்புக் குறித்த செயல்பாடுகளை முன்னெடுக்கும்போது, தமிழர்களுக்கான அரசியல் தீர்வு குறித்து உகந்த அல்லது நல்ல முடிவை எடுப்பேன் என்று அநுர இந்தியாவிற்கும் சர்வதேசத்திற்கும் வாக்கு கொடுக்கலாம். கொடுக்காமலும் இருக்கலாம். அதையும் மீறி, பதிமூன்று அல்லது சமஷ்டி குறித்து இந்தியா தொடர்ந்து அழுத்தம் கொடுத்தால், வட மாகாண தேர்தல் யதார்த்தத்தை குறிப்பிட்டு அவர், வேண்டுமென்றால் பதிலடி கொடுக்கலாம்.

எப்போது, குறிப்பாக வட மாகாணத்தில், அதிலும் குறிப்பாக யாழ்பாண தேர்தல் மாவட்டத்தில், தனது தேசிய மக்கள் சக்தி அதிக வாக்குகளையும் நாடாளுமன்ற ஆசனங்களையும் பெற்றுவிட்டதோ, அப்போதே தமிழர்களது 'புளித்துப்போன' கருத்தியல் வாதங்களுக்கு இடமில்லை என்ற நிலைமையை அநுர தலைமை எடுக்க அதிக நேரம் ஆகாது.

இந்தப் பின்னணியில், அரசுக்கு எதிராக செயல்பட்டு, ஜேவிபி–யின் டில்வின் சில்வா கோடிட்டு காட்டியது போல், இந்தியா பெற்றுதந்த மாகாண சபை முறைமையை இல்லாமல் ஆக்குவது தமிழர் தலைமைக்கு எளிய செயல். மாறாக, முதலில் பதிமூன்றை தக்கவைத்துக் கொண்டு, அதன் கீழ் இதுவரை கிடைக்காத, அல்லது பறிக்கப்பட்ட மாகாண உரிமைகளையும் முதலில் திரும்ப பெற்றுக்கொள்வதே புத்திசாலிதனம்.

அது வெற்றிகரமாக முடிந்த பின்னர், இரு தரப்பிலும் இனப்போர் காலத்திய தலைமுறைகள் தளர்ந்த பின்னரோ அல்லது மறைந்த பின்னரோ, சமஷ்டி உள்ளிட்ட கோரிக்கைகளுக்கும் தீர்வுகளுக்கும் தமிழர்கள் குரல் கொடுக்கலாம். அது அரசியல் ரீதியாக எதிர்கால தென்னிலங்கைத் தலைமைகளால் ஏற்றுக்கொள்ளப்படலாம்.

இதுவே இந்தியாவின் உயிர்ப்போடுகூடிய 'டைனமிக் அரசமைப்பு திட்டம்' சுட்டிக்காட்டும் வழி. அதாவது, அவ்வப்போதைய சமூக –பொருளாதார நிலைமையை கருத்தில்கொண்டு, அரசியல் அமைப்பு சட்டத்தில் தேவையான மாற்றங்களை கொண்டு வருவது.

இதுதான், கையில் வெண்ணெய்யை வைத்துக் கொண்டு, நெய்க்கு அலையாமல் அரசியல் செய்வது. எப்போது, நேரமும் காலமும் கூடி வருகிறதோ, அப்போது தேவையானவற்றை தேவஷ்யான அழுத்தம் கொடுத்து பெற்றுக்கொள்வது.

இந்தியாவில் இந்த முயற்சி இன்னமும் வெற்றிகரமாக, காலத்திற்கேற்ற அரசமைப்பு தீர்வுகளுக்கு வழி செய்து வருகிறது. உதாரணத்திற்கு, தேசிய அளவிலான இட ஒதுக்கீடு முறையைக் கூறலாம். இது போன்ற அரசியல் சட்டத்தின் நாள்பட்ட பரிணாம வளர்ச்சியைதான் இந்தியா இனப்பிரச்சினைக்கான தீர்வு விடயத்திலும் கையாண்டது. எதிர்பார்த்தது.

ஆனால், பிள்ளையார் பிடிக்கப்போய் குரங்காய் மாறிப்போனது இந்தியாவின் குற்றமல்ல. பிள்ளையாரின் குற்றமும் அல்ல. மாறாக, இடையே குதித்து வெற்றிகரமான செயல்பாட்டை தொடர்ந்து குழப்பி அடித்துக் கொண்டிருக்கும் குரங்கின் குற்றமே.

மனம் ஒரு குரங்கு. அதில் தமிழ் அரசியல் தலைமைகளின் மனது தலைமைக் குரங்கு. அவ்வளவுதான்.







# ஈழத்து சைவ ஆலயங்கள்

தமிழர் தாயகத்தில் அவர்களின் வாழ்வோடும் கலாச்சாரத்தோடும் இரண்டரக் கலந்த ஒன்றாக ஈழத்து சைவ ஆலயங்கள் விளங்குகின்றன. ஈழத்திலே இன்றைக்கு ஆயிரம்வருடங்களுக்கு முன்பிருந்தே சைவக்கலாசாரத்தோடு தொடர்புடையதாக ஆலயங்கள் காணப்பட்டு வருகின்றன. இந்த ஆலயங்கள் ஐரோப்பியர் வருகையினால் குறிப்பாக போர்த்துக்கேயர் காலத்தில் முற்றாக அழிக்கப்பட்டு இன்றைய காலகட்டத்தில் மீண்டும் எழுச்சி பெற்று விளங்குகின்றன.

திருக்கேதீச்சரம், திருக்கோணேச்சரம், மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவில், நகுலேச்சரம், முன்னேச்சரம், நல்லூர் கந்தசுவாமி கோவில், தெல்லிப்பளை துர்க்காதேவி ஆலயம், செல்வச்சந்நிதி போன்ற ஆலயங்களை இதற்கு உதாரணமாகக் குறிப்பிடலாம்.

ஈழத்திலே சிவனை முழுமுதற் கடவுளாகக் கொண்ட பஞ்ச ஈஸ்வரங்கள் சிறந்து விளங்குகின்றன. ஆவையாவன வடக்கே கீரிமலையில் அமைந்துள்ள நகுலேஸ்வரம், கிழக்கே திருகோணமலையில் அமைந்துள்ள திருக்கோணேச்சரம், மேற்கே மன்னாரில் திருக்கேதீச்சரம், தெற்கே தொண்டீஸ்வரம், சிலாபத்தில் முன்னேச்சரம், போன்ற பஞ்ச ஈஸ்வரங்களைக் குறிப்பிடலாம். இவை இந்துப்பண்பாட்டையும் கலாசாரத்தையும் பேணுவதில் முக்கிய பங்கு வகிக்கின்றன. திருமூலர் இலங்கையை சிவபூமி என்று குறிப்பிடும் அளவிற்கு சிவ ஆலயங்கள் ஈழத்தில் சிறந்து விளங்கியுள்ளன.

இலங்கையின் கிழக்கு கடற்கரையோரமாக அமைந்துள்ள மலைத் தொடர்களையும் துறைமுகத்திளையும் கொண்டுள்ள திருகோணமலையில் கடலினுள்ளே நீண்டு உயர்ந்து நிற்கும் குன்றில் அமைந்துள்ள ஆலயமே திருக்கோணேச்சரம் ஆகும். இது கி.பி 1300 ஆண்டுகளிற்க முற்பட்ட ஈழத்து சிவாலயமாக விளங்குவதுடன் பல்லவ சோழ மன்னர் கால வரலாற்றுச் சிறப்பு மிக்க ஆலயமாகவும் விளங்குகின்றது. இவ் ஆலயத்தைப்பற்றி தட்சணகைலாய புராணம், கோணேச்சரர் கல்வெட்டு போன்ற நூல்களில் இருந்து அறியலாம். இதன் இறைவன் திருக்கோணநாதர், இறைவி மாதுமைஅம்பாள் ஆகவும் தீர்த்தம் பாவநாசம் ஆகவும் தல விருட்சம் தலீ ஆலமரமாகவும் விளங்குகின்றது. இயக்கர் நாகரால் வழிபடப்பட்ட தலமாகவும் இராவணன் வரலாற்றோடு தொடர்புடையதாகவும் இவ் ஆலயம் விளங்குகின்றது.

மன்னாருக்கு சமீபத்தில் மாந்தோட்டத்தில் உள்ள தலம் திருக்கேதீச்சரம் ஆகும். புராதன காலத்தில் மாஹாதுவட்டாபுரம் எனப்பட்ட இத்தலம் சம்மந்தர், சுந்தரர் போன்ற நாயன்மார்களால் பாடல் பாடப்பெற்ற தலமாகவும் விளங்குகின்றது. பல்லவர் சோழர் காலச் சிறப்பு வாய்ந்ததும் மகாதேவன் கோவில் அழைக்கப்பட்ட இத்தலம் இராஜேந்திர சோழனால் புனரமைக்கப்பட்டது. திருக்கேதீச்சரநாதர் கௌரி அம்பாளுடன் இருந்து அருள்பாலிக்கும் இத்தலத்தில் சிவராத்திரி பூஜை சிறப்பாக நடைபெறுவதுடன் மகோற்சவ காலத்தில் ஐந்து தேர்கள் வலம்வருகின்றன. தீர்த்தம் பாலாவியாகவும் தலவிருட்சம் வன்னி மரமாகவும் காணப்படுகின்றது.

வடக்கேகீரிமலையில் அமைந்துள்ள திருத்தம்பலேஸ்வரம் என்றும் நகுலகிரி என்றும் புராதன காலத்தில் அழைக்கப்பட்ட தலமே நகுலேச்சரம் ஆகும். நகுல முனிவர் தவம் செய்து கீரிமுகம் நீங்கிய தலமாகிய இங்கு ஆடி அமாவாசை தினத்தில் பிதிர்கடன் தினத்தில் இடம்பெறுகின்றது. நகுலேச்சர பெருமானும் நகுலாம்பிகையும் இருந்து அருள்பாலிக்கின்ற இத்தலம் பற்றி நகுலேச்சர மான்மியம் நகுலேச்சர சதகம், யாழ்ப்பாண வைபவமாலை போன்ற நூல்களில் இருந்து அறியக் கூடியதாக உள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் தென்மேற்குப் பகுதியில் கொக்கட்டிச்சோலை என்னும் இடத்தில் அமைந்துள்ள கிழக்கு இலங்கையின் தேசத்துக் கோயில்களில் ஒன்றான கொக்கட்டிச்சோலை தான்றோன்றீஸ்வரம் கல்நந்தி புல் உண்ட சிறப்பு வாய்ந்த தலமாக விளங்குகின்றது. மட்டக்களப்பு மான்மியம் போன்ற நூல்களில் இருந்து வரலாற்றை அறியக் கூடியதாக உள்ளதுடன் குளக்கோட்டன் திருப்பணி செய்தமையை 'மேன்மை தான்றோன்றி லிங்கம் வெற்றி புனை....' என்ற பாடல்வரியினூடாக குளக்கோட்டன் கல்வெட்டில் இருந்தும் அறியக் கூடியதாகவுள்ளது. சங்கமரால் பூசை செய்யப்படும் இக்கோயிலில் தான்றோன்றீஸ்வரரும் பார்வதி அம்மையாரும் இருந்து அருள் பாலிப்பதுடன் கொக்கட்டிமரம் தலவிருட்சமாக உள்ளது. கிழக்கிலங்கையின் தேரோடும் கோயில் எனச் சிறப்பிக்கப்படுகின்றது.

ஈழத்திலே தொன்மை வாய்ந்த முருக வழிபாட்டுத் தலமான நல்லூர் கந்தசுவாம் ஆலயம் இலங்கையின் வடக்ஹிகு யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ளது. இது ஆரியச்சக்கரவர்த்திகள் யாழ்ப்பாண இராட்சியத்தை ஆண்டகாலத்தில் கனகசூரிய சிங்கை ஆரியன் காலத்தில் செம்பகப்பெருமாள் எனப்படும் 6ம் புவனேகபாகு படையெடுத்து வந்த போது கனகசூரியன் தென்னிந்தியாவிற்க தப்பியோட ஆட்சிசெய்த செண்பகப்பெருமாள் நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தை அமைத்தான். சிங்கை பரராசசேகரன் காலத்தில் சிறப்புப்பெற்ற இவ் ஆலயத்தின் நான்கு புறமும் வடக்கே சட்டசாதர் கோவிலும் கிழக்கே வெயிலுகந்த விநாயகர் ஆலயமும் தெற்கே கைலாசநாதர் கோயிலும் மேற்கே வீரமாகாளி அம்மன் கோயிலும் அமைக்கப்பட்டுள்ளன. ஆவணி அமாவாசையை தீர்த்தநாளாகக் கொண்டு 25 நாட்கள் மகோற்சவம் இடம்பெறுகின்றது.

இலங்கையின் வடக்கே தென்மேற்குத் திசையில் மணிபல்லவத் தீவில் அமைந்துள்ள நயினை நாகபூசனி அம்மன் ஆலயம் சிறப்புப்பெற்ற அம்மன் தலமாக விளங்குகின்றது. ஐந்து தலை நாகபடக் குடையில் அம்பாள் வீற்றிருந்து அருள்பாலிக்கும் இத்தலத்தில் ஆனி பூரணையை தீர்த்த நாளாகக் கொண்டு மகோற்சவம் இடம்பெறுகின்றது. தல விருட்சமாக வன்னி மரமும் தீர்த்தமாக சித்தாமிர்த புஸ்கரணியும் காணப்படும் இத்தலத்தில் தினமும் அமுத சுரபி மடத்தில் அன்னதானம் வழங்கப்பட்டு வருகின்றது.

இலங்கையின் வடக்கே அமைந்துள்ள யாழ்ப்பாணத்தில் உள்ள தெல்லிப்பளையில் அமைந்துள்ள துர்க்காதேவி அம்மன் ஆலயம் பிரசித்திபெற்ற தலமாக விளங்குகின்றது. இங்கு ஆவணிமாத பூரணை தினத்தை தீற்த்தோற்சவமாகக் கொண்டு மகோற்சவம் அடம் பெறுகின்றது. இவ் ஆலயம் தற்போது புனரமைக்கப்பட்டு புத்தம் புதுப் பொலிவுடன் காட்சி அளிக்கின்றது.

வடக்கே மாவிட்டபுரத்தில் அமைந்துள்ள கந்தசுவாமி கோவிலும் சிப்புப் பெற்ற முரக வழிபாட்டுத் தலமாகும். குதிரை முகம் நீங்கிய சிறப்புப்பெற்ற இத்தலத்தில் ஆடி அமாவாசையை தீர்த்த உற்சவமாகக் கொண்டு 25நாட்கள் மகோற்சவம் இடம்பெறுகின்றது. மாருதப் புரவீக வல்லியின் குதிரைமுகம் நீங்கியமையால் சிறப்புப் பெறுகின்றது.

இலங்கையின் வடக்கே அமைந்துள்ள முருகவழிபாட்டுத் தலங்களில் செல்வச்சந்நிதி முருகன் ஆலயமும் ஒன்றாகும். இங்கு தினமும் அன்னதானம் வழங்கப்படுவதால் இம் முருகன் அன்னதானக்கந்தன் எனச் சிறப்பிக்கப்படுகின்றார். ஆவணி பௌர்ணமியை தீர்த்த நாளாகக் கொண்டு மகோற்சவம் நடைபெறுவதுடன் இம் முருகன் பல அற்புதங்களை செய்பவராகவும் விளங்குகின்றார்.

இலங்கையின் வடமேற்கு மாகாணத்தில் புத்தளம் மாவட்டத்தில் சிலாபத்தில் அமைந்துள்ள சிவாலயமான முன்னேச்சரம் வியாசர், இராமர் போன்றோரால் வழிபடப்பட்ட சிறப்பிற்கு உரியது. இதனை சிங்கள மன்னர்களான 6ம்பராக்கிரமபாகு, 9ம்பராக்கிரமபாகு போன்றோரும் நாயக்க மன்னரான கீர்த்தி ஸ்ரீ ராஜசிங்கனும் திருப்பணிகளை செய்துள்ளனர். முன்னைநாதரும் வடிவாம்பிகையும் இருந்து அருள்பாலிக்கும் இத்தலத்தில் பௌர்ணமி தினத்தில் ஸ்ரீசக்கர பூஜை சிறப்பாக இடம்பெறுகிறது. மாயவன் ஆறு தீர்த்தமாகவும், தலவிருட்சம் அரசாகவும் உள்ள இத்தலத்திலே ரதோற்சவம் சிறப்பாக இடம்பெறுகின்றது.

இவ்வாறாக ஈழத்தில் சைவ ஆலயங்கள் சிறந்து விளங்கி இந்துப்பண்பாட்டையும் கலாச்சாரத்தையும் பேணிப் பாதுகாக்கின்றன. 'கடவுளை நம்பினோர் கைவிடப்படார்' என்ற முன்னோர் வாக்கிற்கு அமைய கடவுளை வணங்கி நல்வாழ்வு வாழ்வோமாக.

**சு. திலக்ஷிகா**



காலைக்கதிர்
Kalaikkathir

# சப்ரகமுவ பல்கலை மாணவர்கள் திடீர் சுகவீனம்; விசாரணை அறிக்கையை சமர்ப்பிக்கப் பணிப்பு

## பிரதமர் ஹருணி விடுத்தார்

சப்ரகமுவ பல்கலைக்கழக விவசாய பீடத்தின் இரண்டாம் வருட மாணவர்களில் 7 பேர் தடுப்பூசி செலுத்துப்பட்டதன் பின்னர் ஏற்பட்ட திடீர் சுகவீனம் காரணமாக வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட விடயம் தொடர்பில் துரிதமாக விசாரணை அறிக்கையை சமர்ப்பிக்குமாறு பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய உரிய அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

சப்ரகமுவ பல்கலைக்கழக விவசாய பீடத்தின் இரண்டாம் வருடத்தில் கல்வி பயிலும் 7 மாணவர்கள் கடந்த 17ஆம் திகதி பல்கலைக்கழக மருத்துவ மையத்தின் மூலம் வழங்கப்பட்ட தடுப்பூசி காரணமாக திடீர் சுகவீனத்துக்கு ஆளாகியுள்ளனர். இதனையடுத்து குறித்த மாணவர்கள் பெலிஉல்ஓய மற்றும் பலாங்கொடை ஆரம்ப வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டிருந்தனர்.

தடுப்பூசி செலுத்தப்பட்ட 6 மாணவியர்களும் ஒரு மாணவரும் இவ்வாறு திடீர் சுகவீனத்துக்கு ஆளாகியுள்ளதாகவும் காலாவதியாகி இரண்டு மாதங்களான தடுப்பூசிகள் இவர்களுக்கு செலுத்துப்பட்டுள்ளதாகவும் குறித்த பல்கலைக்கழக மாணவர்களால் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

மேற்படி விடயம் தொடர்பில் சப்ரகமுவ பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் தலைவர் கருத்து தெரிவிக்கையில் -

சப்ரகமுவ பல்கலைக்கழக விவசாய பீடத்தில் இரண்டாம் வருடத்தில் கல்வி பயிலும் 6 மாணவிகள் மற்றும் ஒரு மாணவருக்கு வழங்கப்பட்ட தடுப்பூசி காரணமாகசுகவீனமுற்றநிலையில்தற்போது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். பல்கலைக்கழக மருத்துவ மையத்தின் மூலம் காலாவதியாகி இரண்டு மாதங்களான தடுப்பூசிகள் செலுத்தப்பட்டுள்ளன.

சப்ரகமுவ பல்கலைக்கழக மருத்துவ மையத்தில் பல சிக்கல்கள் நிலவிவருவதுடன் ஏற்கனவே இவ்வாறான சிக்கல்களால் ஒரு பேராசிரியரும், இரு மாணவர்களும் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளனர். - என்றார்.

இதேவேளை, இவ்விடயம் தொடர்பில் தகவலறிந்த பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய, பல்கலைக்கழக ஆணைக்குழுவின் தலைவர், சப்ரகமுவ விவசாய பீடத்தின் பீடாதிபதி, பலாங்கொடை ஆரம்ப வைத்தியசாலை அத்தியட்சகர் ஆகியோரிடம் சம்பந்தப்பட்ட மாணவர்களின் உடல்நிலை தொடர்பில் கேட்டறிந்துகொள்ளுமாறும் உயர் அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கியிருந்தார்.

மேலும், இது தொடர்பில் ஆராய்ந்து துரிதமாக விசாரணை அறிக்கையை சமர்ப்பிக்குமாறும் உரிய அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

# நீரினுள் அமிழ்த்திய பந்துபோன்ற பண்பைக் கொண்டவள் நான்

## ஹிருணிகா தெரிவிப்பு




அரசியல்வாதிகள் நீருக்குள் மூழ்கடிக்கப்படும் பந்தாக இருக்க வேண்டும். கீழே செல்லும் ஒவ்வொரு சந்தர்ப்பங்களிலும் மேலெழ முயற்சிக்க வேண்டும். நான் அவ்வாறான பண்புள்ளவள் என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஹிருணிகா பிரேமசந்திர தெரிவித்தார்.

ஊடகவியலாளர் மாநாட்டில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில் -

ஐக்கிய மக்கள் சக்திக்கு கிடைக்கப் பெற்றுள்ள தேசிய பட்டியல் ஆசனங்களில் ஒன்று பெண்ணொருவருக்கு வழங்கப்படுமாயின் அதற்கு பொருத்தமானவள் நான் எனத் தெரிவித்திருந்தேன். எனினும் இம்முறை பெண்களுக்கு வழங்குவதில்லை என்று கட்சி தீர்மானித்திருக்கிறது. அதனாலேயே எனக்கும் வாய்ப்புக் கிடைக்கவில்லை.

எவ்வாறிருப்பினும் பதவிகள் கிடைத்தாலும், கிடைக்காவிட்டாலும் எனது பொறுப்புக்களை நான் நிறைவேற்றுவேன். 2020 இலும் தேர்தலில் தோல்வியடைந்ததன் பின்னர் ஓரிரு வாரங்களுக்குள் மீண்டும் எனது அரசியல் செயற்பாடுகளை ஆரம்பித்துவிட்டேன். தேர்தலில் தோல்வியடைந்ததற்காகவும், தேசிய பட்டியல் ஆசனம் கிடைக்கவில்லை என்பதற்காகவும் நான் துவண்டுவிடப் போவதில்லை.

அரசியல்வாதிகள் நீருக்குள் மூழ்கடிக்கப்படும் பந்தாக இருக்க வேண்டும். கீழே செல்லும் ஒவ்வொரு சந்தர்ப்பங்களிலும் மேலெழ முயற்சிக்க வேண்டும். நான் அவ்வாறான பண்புள்ளவர். மக்களுக்காக நான் செய்யும் சேவைகளை இன்னும் அதிகரிக்க வேண்டும் என்று எனக்கு தோன்றுகிறது. எனது தோல்விக்கு இதுவும் கூட காரணமாக இருக்கலாம். - என்றார்.

# தேர்தல் காலங்களில் வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றுக

## ஹிஸ்புல்லாஹ் கோரிக்கை

(நூருல் ஹுதா உமர்)

அரசாங்கம் ஆட்சிக்கு வருவதற்கு முன்னர் பொருள்களின் விலைகளை குறைப்போம், மின்சார கட்டணங்கள் மற்றும் எரிபொருள்களின் விலைகளை குறைப்போம் என்று பல்வேறு விடயங்களை சொல்லி ஆட்சிக்கு வந்த அரசு ஜனாதிபதி தேர்தல் மற்றும் நாடாளுமன்ற தேர்தல்கள் நிறைவடைந்தும் பொருள்களின் விலையை குறைத்ததாக தாம் அறியவில்லை என்றும் மாறாக அரிசி, தேங்காய் மற்றும் சில பொருள்களின் விலைகள் நாளுக்கு நாள் அதிகரித்து செல்வதாகவும் விலைகளை குறைக்க முடியாத நிலையில் அரசு திண்டாடுவதாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பிரதித்தலைவரும் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ் தெரித்தார்.

நாடாளுமன்றத்தில் உரையாற்றும்போதே இவ்வாறு தெரிவித்தார்.

மேலும் அவர் தெரிவிக்கையில், அரசாங்கம் பொருள்களின் விலைகளை குறைத்து நாட்டினுடைய பொருளாதார சுமையை மக்கள் மீது சுமத்தாமல் தாம் தேர்தல் காலங்களில் வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்ற வேண்டும். அதேபோன்று அத்தியவசியமான உணவுப்பொருள்களின் விலைகளை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்து மக்கள் குறைந்த விலையில் பெற்றுக்கொள்வதற்குரிய நிலையை அரசாங்கம் மேற்கொள்ளவேண்டும்.

அஸ்வெசும திட்டத்தின் ஊடாக அரச ஊழியர்களுக்கும் ஆறாயிரம் ரூபா வட்டியில்லாத கடனாக வழங்க நடவடிக்கை எடுப்பதோடு, அண்மையில் ஏற்பட்ட வெள்ள அனர்த்தத்தால் கிழக்கு மாகாணத்தில் குறிப்பாக மட்டக்களப்பு மாவட்டத்தில் மரங்கள் விழுந்து சேதமடைந்த நிலையில் பல பாடசாலைகளை நடத்த முடியாத நிலை காணப்படுகிறது. அதேபோல் பல வீதிகளும் சேதமடைந்து காணப்படுகிறது. இதனை கருத்திற்கொண்டு அதற்கான நிதியை மாகாண சபையில் நிதிப்பற்றாக்குறை காரணமாக பெற முடியாமல் இருப்பதால் மத்திய அரசாங்கத்தின் ஊடாக அதற்கான நிதியை வழங்கி பாடசாலை, வீதிகளை புனரமைப்பு செய்யும் நடவடிக்கைகளை அரசாங்கம் விரைவுபடுத்த வேண்டும் என கேட்டுக்கொள்கிறேன். - என்றார்.

# பெண் தொழில் முயற்சியாளர்களுக்கு கிளிநொச்சியில் வாழவாதார உதவி

கிளிநொச்சி மாவட்ட பெண்கள் தேசிய நிலையத்தால் பெண் தொழில் முயற்சியாளர்களுக்கு வாழ்வாதார உதவி வழங்கும் நிகழ்வு செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

வலுவூட்டல் மற்றும் வாழ்வாதார உதவி வழங்கல் செயற்றிட்டத்தின் கீழ் தெரிவுசெய்யப்பட்ட 10 தொழில் தொழில் முயற்சியாளர்களுக்கு தலா ஒரு லட்சம் ரூபா பெறுதியான வாழ்வாதார உதவிகள் வழங்கி வைக்கப்பட்டன.

செவ்வாய்க்கிழமை கரைச்சி பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட நான்கு பேருக்கு வாழ்வாதார உதவிகள் வழங்கி வைக்கப்பட்டன. மிகுதி பேருக்கு அந்தந்த பிரதேச செயலகங்கள் ஊடாக வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்ட பெண்கள் தேசிய நிலைய பிரதிப் பணிப்பாளர் அ.கேதீஸ்வரன் தலைமையில் நடைபெற்ற குறித்த நிகழ்வில், கிளிநொச்சி மாவட்ட பதில் அரசாங்க அதிபர் எஸ்.முரளிதரன் கலந்துகொண்டு வாழ்வாதார உதவிகளை வழங்கி வைத்தார்.

பெண் தலைமை தாங்கும் குடும்பங்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தவும் அதன் மூலம் நாளாந்தம் தங்களது ஜீவனாம்சத்தை கொண்டு செல்லவும் இத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகிறது.

மகளீர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சின் கீழ் செயற்படுகின்ற இலங்கை பெண்கள் பணியகமானது பெண் தலைமை தாங்கும் மற்றும் கணவனை இழந்த பெண்களினுடைய மேம்படுத்தலுக்கான செயற்றிட்டங்களை முன்னெடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இந் நிகழ்வில் கிளிநொச்சி மாவட்ட பெண்கள் தேசிய நிலைய உத்தியோகத்தர்கள் மற்றும் பயனாளிகள் கலந்து கொண்டிருந்தனர். 113

## புதிய....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாட்டிலேயே வாழுகின்ற பூர்வகுடிகள் மீது முற்காலத்தில் மேற்கொள்ளப்பட்ட குற்றங்களையும் இன அழிப்பு என்று ஏற்றுக்கொண்டு அதற்குப் பரிகார நீதியை வழங்க கனடா நாடு முற்படுகின்றமை முன்மாதிரியானது.

கனடிய ஈழத்தமிழர்கள் தமக்குரிய இரண்டாம் தாயகமாக வரித்துக்கொண்டுள்ள தங்கள் அரசிடம், தமது தாயகத்தில் பாதிக்கப்பட்ட தரப்பாக, அந்தப் பாதிப்போடு கனடாவிலும் தமது வாழ்க்கையைத் தொடர்கின்றவர்களாக, தாயகத்தில் ஈழத்தமிழர் மீதான இன அழிப்புத் தொடர்பான இலங்கை அரசின் பொறுப்பை உலக நீதிமன்றில் விசாரிக்க உதவுமாறு வேண்டிநிற்கிறார்கள்.

இது தொடர்பாக கனடிய நாடாளுமன்றில் தற்போது முன்வைக்கப்பட்டுள்ள இரு மனுக்களையும் முழுமையாகக் கருத்தில் எடுத்து அடுத்த கட்ட நடவடிக்கையை உலக நீதிமன்று நோக்கி முன்னெடுக்க ஆவன செய்யுமாறு கனேடிய அரசை, குறிப்பாக வெளிநாட்டமைச்சை வேண்டுகிறேன். இது தொடர்பாக கனடாவில் வாழும் ஈழத்தமிழர்களின் பலதரப்பட்ட அமைப்புகளும் அடிமட்டச் செயற்பாட்டாளர்களும் செயற்பட்டுவந்துள்ளார்கள் என்பதோடு, இவை பற்றி தொடர்ச்சியாக தாயகத்திலிருக்கும் மக்கள் பிரதிநிதிகளுக்கும் அறியத்தந்துகொண்டிருக்கிறார்கள்.

2. ஐ.நா. மனித உரிமைப் பேரவையில் கையாளப்படும் இதர குற்றங்கள் தொடர்பான பொறுப்புக்கூறல் மற்றும் நல்லிணக்க முயற்சிகளில் உயர் கட்டத் தரமுயர்த்தலை எதிர்வரும் 60 ஆம் கூட்டத் தொடரோடு மேற்கொள்ளுதல்.

ஐ.நா. மனித உரிமைப் பேரவையில் இலங்கை தொடர்பான பொறுப்புக்கூறல் தொடர்பான இறுதியாக மேற்கொள்ளப்பட்டுள்ள தீர்மானம் 51/1 (06 ஒக்டோபர் 2022) மேலும் நீடிக்கப்பட்டு, அதன் அடுத்த கட்டமாக 58 ஆம் அமர்வில் (பெப்ரவரி--ஏப்ரல் 2025) வாய்மூல அறிக்கையிடலையும், 60 ஆம் அமர்வில் (செப்ரம்பர்-- ஒக்ரோபர் 2025) எழுத்துமூல அறிக்கையிடலையும் மேற்கொள்ளுமாறு மனித உரிமை உயர் ஆணையாளரையும் பேரவைப்பொறிமுறையையும்பணித்துள்ளது.

ஐ.நா. மனித உரிமைப் பேரவையில் பல ஆண்டுகளாகத் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டுவரும் தீர்மானங்களும், அவை தொடர்பான நடவடிக்கைகளும், அறிக்கையிடல்களும் இலங்கைத் தீவில் இடம்பெற்ற சர்வதேசக் குற்றங்கள் தொடர்பான கவனத்தைப் பெரிதும் ஈர்த்துள்ளபோதிலும், இலங்கை மீது தொடர்ச்சியாக அழுத்தங்களை மேற்கொண்டுவந்துள்ள போதிலும், பொறுப்புக்கூறல் தொடர்பில் இலங்கையில் மாறிமாறி ஆட்சிபீடம் ஏறி வரும் அரசாங்கத் தரப்பினர் அவ்வப்போது வாக்குறுதிகளை வழங்கிவிட்டு அவற்றை மீளப்பெற்றுள்ள அரசியல் விருப்பற்ற கண்துடைப்பு நடவடிக்கைகளே தொடர்ந்துகொண்டிருக்கின்றன.

விளைவாக, காலநீடிப்பும் அரசியல் வெளியும் இலங்கை அரசுக்கு தொடர்ந்து வழங்கப்படுவதே நடைபெற்றுள்ளது. இதனால், பாதிக்கப்பட்ட மக்கள் விசனமடைந்துள்ளார்கள். காணாமலாக்கப்பட்டோர் தொடர்பாக உருவாக்கப்பட்ட அலுவலகப் பொறிமுறையிலும் மக்கள் நம்பிக்கை இழந்துள்ளார்கள். ஆகவே, இனியும் இலங்கை அரசுக்கு கால நீடிப்பும் அரசியல் வெளியும் வழங்காது, பொறுப்புக்கூறல் தொடர்பான குற்றவியல் பொறுப்புத் தொடர்பான சர்வதேச விசாரணையை நோக்கி அடுத்த கட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் விதத்தில் அடுத்த தீர்மானத்தில் தகுந்த தரமுயர்த்தல் மேற்கொள்ளப்படவேண்டும் என்பது எமது மக்களின் எதிர்பார்ப்பாக உள்ளது. இலங்கை தொடர்பான தீர்மானங்களைப் பிரேரிக்கும் மையக் குழு நாடுகளிடம் இந்தத் தரமுயர்த்தலை நாம் வேண்டிநிற்கிறோம்.

நீண்ட காலமான இழுத்தடிப்பானது காலங்கடந்த நீதி மறுக்கப்பட்ட நீதி என்றாகிவிடும் நிலையைத் தோற்றுவித்துள்ளது. உலகில் ஏற்படும் ஸ்திரமின்மையும் உலக ஒழுங்கு மாற்றங்களும் மேலும் நீர்த்துப்போகச் செய்யும் சூழலை ஏற்படுத்திவிடுமோ என்று எமது மக்கள் அஞ்சுகிறார்கள். ஆதலால், இலங்கை தொடர்பான தீர்மானத்தை இனிமேலும் இரண்டாம் நிகழ்ச்சிநிரலுக்குள் கையாளுவதற்குப் பதிலாக, தரமுயர்த்தப்பட்ட நான்காம் நிகழ்ச்சிநிரலுக்குள் கையாளுவது மேலும் பொருத்தமாக இருக்கும் என்பது எமது அபிப்பிராயம்.

அதேவேளை நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டுள்ள சாட்சியங்களைச் சேகரித்துப் பேணும் பொறிமுறையை ஒரு முழுமையான 'சர்வதேச பக்கச்சார்பாற்ற சுயாதீனப் பொறிமுறையாக தரமுயர்த்துவது மேலும் சிறப்பாக அமையும்.

போர்க்குற்றங்கள், மனிதத்துவத்துக் கெதிரான குற்றங்கள் போன்றவற்றுக்கும் மேற்சென்று இன அழிப்புக் குற்றங்கள் தொடர்பான குறிப்பான நோக்கு, தாக்குதல்கள் தொடர்பான சாட்சிகளையும் சாட்சியப் பொறிமுறை உள்ளடக்கும் வகையில் அது தரமுயர்த்தப்பட்டால் மேலே குறிப்பிடப்பட்ட முதலாம் கோரிக்கைக்குத் தேவையான சாட்சிகளைத் திரட்டுவதற்கும் அது பெரும் உதவியாக அமையும். இது குறித்த ஆய்வெல்லையைத் தரும் வகையில் அடுத்த தீர்மானம் அமையவேண்டும் அல்லது அதற்கேற்ற உண்மைகளைக் கண்டறியும் ஆணையத்தை நியமிக்கவேண்டும்.

அதேவேளை, ஐ.நா. பாதுகாப்புச் சபையும், பொதுச்சபையும், பொதுச் செயலாளரும் இலங்கை தொடர்பான பொறுப்புக்கூறல், சர்வதேச விசாரணை குறித்து தீர்க்கமான மேலதிக நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு ஐ.நா. மனித உரிமைப் பேரவை பரிந்துரைக்கவேண்டும் என்றும் எமது மக்கள் எதிர்பார்க்கிறார்கள். ஐ.நா. பாதுகாப்புச் சபையில் அங்கம் வகிக்கும் தனது நட்பு நாடுகளின் ஊடாக கனடா இதற்கு ஏதுவான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்றும் எனது மக்கள் சார்பாக வேண்டிக்கொள்கிறேன்.

3. புதிய அரசமைப்பு காத்திரமாக மேற்கொள்ளப்படுவதற்குரிய புதுமையான சர்வதேச மத்தியஸ்துவத்தை ஏற்படுத்த ஆவன செய்தல்.

புதிய அரசியலமைப்பு ஒன்றின் ஊடாக இனப்பிரச்சனைக்கான தீர்வு காணப்படும் என்ற தேர்தல் வாக்குறுதியை தென்னிலங்கையின் பிரதான கட்சிகள் பெரும்பாலும் ஒத்துக்கொண்டிருந்தாலும், அரசியலமைப்பு ஒன்று உருவாக்கப்படுகின்றபோது, அது மீண்டும் இறுக்கமான ஒற்றையாட்சித் தன்மை கொண்ட ஒன்றாக அமைந்துவிடும் ஆபத்து உள்ளது என்ற அச்சம் பரவலாகத் தமிழ் மக்களிடையே வேரூன்றியுள்ளது. கடந்த கால அனுபவத்தோடு நோக்குகையில் இது நியாயமான அச்சமே.

இவ்வாறான சிக்கலுக்கு மீண்டும் மீண்டும் நாம் ஆளாகாது இருக்கவேண்டுமாயின் தீவிலுள்ள தத்தமக்கான இறைமைக்கும் முழுமையான சுயநிர்ணய உரிமைக்கும் பரிகாரநீதிக்கும் உரித்துடைய தேசங்களுக்கும் ஏனைய மக்களுக்கும் இடையே கூட்டு உரிமைகளை உறுதிப்படுத்தும் அரசியலமைப்புக்கு முன்னரான சமூக ஒப்பந்தம் ஒன்று சர்வதேச மத்தியஸ்தத்தோடு மேற்கொள்ளப்பட்டு, அதன் தொடர்ச்சியாக அரசியலமைப்பு உருவாக்கப்படுவதே பொருத்தமாக இருக்கும்.

இது தொடர்பில் கனடா முன்னுதாரணமான ஆட்சிமுறையைக் கொண்ட ஒரு நாடாக விளங்குகிறது. கியூபெக் மாகாணத்தின் ஒரு தலைப்பட்சமாகப் பிரிந்து செல்லும் உரிமை தொடர்பாக 1998 ஆம் ஆண்டு கனடிய உச்ச நீதிமன்ற தீர்ப்பு வெளியாகிய பின்னர் தெளிவுபடுத்தற் சட்டம் என்பதை 2000 ஆம் ஆண்டில் கொண்டுவந்து கூட்டாட்சி அலகுகளான மாகாணங்களுக்கான சுயநிர்ணய உரிமையின் பாற்பட்ட பொதுவாக்கெடுப்பை எவ்வாறு நடாத்தவது என்பதைத் தெளிவுபடுத்திய அரசியலமைப்பைக் கொண்டுள்ளது. இந்தவகையில் கனடா நாட்டின் கூட்டாட்சி முறை எமக்கு நம்பிக்கை தரும் ஒரு முன்னுதாரணம் ஆகும். இதைப் போன்ற ஒரு தீர்வை இலங்கைத் தீவிலும் ஏற்படுத்தும் வகையில் ஊக்கமூட்டும் சர்வதேச ஒழுங்குகளைக் கனடிய அரசு ஏற்படுத்தித்தரவேண்டும் என்றும் பணிவோடு வேண்டுகிறேன்.

நல்லிணக்க நடவடிக்கைகளையும் பொருளாதார ரீதியான முன்னெடுப்புகளையும் ஒன்றோடு ஒன்று இணைந்ததாகப் புலம்பெயர் ஈழத்தமிழர்கள் தமது பூர்வீகத் தாயகத்தோடு மேற்கொள்வதற்கு ஏதுவாக மேற்குறித்த பொறுப்புக்கூறல், அரசியல் தீர்வு ஆகியன இன்றியமையாத முதற்கட்ட நடவடிக்கைகள் என்பதை வலியுறுத்த விரும்புகிறேன். அவர்களின் மகிழ்வான உளநலத்துக்கும் இது நன்மை பயக்கும். பொறுப்புக்கூறலும் அநீதிகள் மீளநிகழாமையும் உறுதிப்படுத்தப்பட்டாலே உரிமையோடு அடுத்த கட்ட பொருளாதார நல்லிணக்க நகர்வுகள் ஆரோக்கியமாக இடம்பெறும் சூழல் எமது தீவில் உருவாகும் என்பதையும் தங்கள் மேலான கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

இவ்வாறு அவர் தனது கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

## பழிவாங்கும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காரியாலயத்தில் நேற்று செய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

முன்னாள் ஜனாதிபதிகளின் பாதுகாப்பு முறையற்ற வகையில் குறைக்கப்பட்டுள்ளது. 30 வருடப் போரை முடிவுக்கு கொண்டு வருவதற்கு முன்னாள் ஜனாதிபதிகளான சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க, மஹிந்த ராஜபக்ச மற்றும் கோட்டபய ராஜபக்ச ஆகியோர் கடுமையான தீர்மானங்களை எடுத்தனர்.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச 30 வருடகாலப் போரை முடிவுக்கு கொண்டு வருவதற்கு உறுதியான தீர்மானத்தை எடுத்ததால்தான் இந்த நாட்டில் ஜனநாயகம் இன்றும் அமுலில் உள்ளது என்பதை அனைவரும் நினைவில் வைத்துக் கொள்ளவேண்டும். அத்துடன் மக்கள் விடுதலை முன்னணி வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களுக்கு சென்று தேர்தல் பரப்புரைகளில் ஈடுபட்டு வெற்றிப் பெற முடிந்தது என்பதையும் நினைவில் வைத்துக்கொள்ளவேண்டும்.

முன்னாள் ஜனாதிபதிகளின் பாதுகாப்பு தொடர்பில் பரிந்துரைகளை முன்வைத்துள்ள குழுவின் அறிக்கையை ஏற்றுக்கொள்ள முடியாது. ராஜபக்சக்களை பழிவாங்கும் நோக்கத்தில்தான் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவின் பாதுகாப்பு குறைக்கப்பட்டு, இராணுவ பாதுகாப்பு முழுமையாக நீக்குவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

ரணில் விக்கிரமசிங்க, மைத்திரிபால சிறிசேன ஆகியோரின் பாதுகாப்புத் தேவையுடன் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவின் பாதுகாப்பை ஒப்பிட முடியாது. புலம்பெயர்ந்தவர்களும், விடுதலைபுலிகளின் பிரிவினைவாத கொள்கையுடையவர்களும் இன்றும் ராஜபசக்களுக்கு எதிராகவே செயற்படுகிறார்கள் என்பதை ஆளும்தரப்பு நினைவில் வைத்துக்கொள்ளவேண்டும்.

முன்னாள் ஜனாதிபதிகளுக்கு வழங்கப்பட்டுள்ள இராணுவ பாதுகாப்பை நீக்குவது தொடர்பில் எடுத்துள்ள தீர்மானத்தை ஆளும்தரப்பு மீள்பரிசீலனை செய்ய வேண்டும். செலவுகளைக் குறைப்பதாக குறிப்பிட்டுக் கொண்டு முன்னாள் ஜனாதிபதிகளின் பாதுகாப்பை பலவீனப்படுத்த வேண்டாம் - என்று அவர் மேலும் தெரிவித்தார்.

## சஜித்தின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தகைமை தொடர்பில் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ பாராளுமன்றத்தில் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் வகையிலேயே இந்தக் கல்வித் தகைமைகள் அனைத்தும் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டதாக அந்த அறிவிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முன்னதாக வாராந்த அமைச்சரவை தீர்மானங்களைப் பகிர்ந்துகொள்ளும் செய்தியாளர்கள் சந்திப்பில் பேசிய அமைச்சரவைப் பேச்சாளர், எதிர்க் கட்சித் தலைவரின் சான்றிதழ்கள் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவில்லை என்று தெரிவித்திருந்தார்.

ஆளும்தரப்பின் ஏனைய நாடாளுமன்ற உறுப்பினர்களுக்குத் தமது தகைமைகளை நிரூபிப்பதில் சிக்கல் இல்லை. முன்னாள் சபாநாயகர் அசோக ரன்வலவின் பட்டம் போலியானதல்ல. ஆனால் அவரால் தற்போது அதனை நிரூபிக்க முடியாதுள்ளது. அதன் காரணமாகவே அவர் பதவிவிலகினார். ஏனைய வைத்தியர்கள் மற்றும் சட்டத்தரணிகளின் பட்டங்கள் குறித்து எமது நாட்டுக்குள்ளேயே உறுதிப்படுத்திக்கொள்ளக்கூடிய வாய்ப்புக்கள் உள்ளன.

அமைச்சர் ஹர்ஷண நாணயக்காரவுக்கும் அரசின் சிரேஷ்ட சட்டத்தரணி என்ற பதவி கிடைக்கப் பெற்றிருந்தது. அவர் ஆளும்தரப்பின் உயர் சட்டத்தரணியாகச் செயற்பட்டபோது மாத்திரமே அந்தப் பதவியைப் பயன்படுத்தினார். சட்டமா திணைக்களப் பணிகளிலிருந்து விலகிய பின்னர் அவர் அந்த பதவியைப் பயன்படுத்தவில்லை. ஆனால் 2009இல் மாகாணசபைத் தேர்தலில் போட்டியிட்ட அஜித் பி பெரேரா தன்னை சிரேஷ்ட சட்டத்தரணி என்றே அடையாளப்படுத்திக் கொண்டார்.

எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாசவின் கல்வித் தகைமையை நிரூபிக்குமாறு மாத்திரமே சவால் விடுக்கப்பட்டது. அவர் தனது பிறப்பு பதிவு சான்றிதழை சமர்ப்பித்திருக்கவேண்டிய அவசியம் இல்லை. காலையில் சபை அமர்வின்போது அவர் சான்றிதழை காண்பித்திருந்த போதிலும், ஹன்சாட்டில் உள்வாங்குவதற்காக அவர் அதனை சமர்ப்பிக்கவில்லை. இன்று (நேற்று) காலையும் அவர் அதனைச் சமர்ப்பித்திருக்கவில்லை. எதிர்க்கட்சி தலைவர் தனது சான்றிதழை சமர்ப்பித்ததன் பின்னர் அதன் உண்மை தன்மை குறித்து ஆராயப்படும் என்றார்.

## வீண்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எதிர்க்கட்சிகள் பொதுவாக ஆளும்தரப்பைப் புகழ்ந்து பேசப் போவதில்லை என்றாலும், சர்வதேச நாணய நிதியத்தின் கட்டமைப்பிற்குள் இருந்து விமர்சனம் செய்யவேண்டும். ஆளும்தரப்புக்கோ அல்லது எதிர்க்கட்சிக்கோ சர்வதேச நாணய நிதியத்தின் கட்டமைப்பிற்கு அப்பால் செயற்படமுடியாது.

2024 ஆம் ஆண்டில் நாட்டின் பொருளாதார வளர்ச்சி இரண்டு சதவீதமாக இருக்கும் என்று சர்வதேச நாணய நிதியம் மதிப்பிட்டது. அந்த வளர்ச்சி வீதத்தை இன்னும் அதிகரிக்க விரும்பினேன். எனவே, ஆண்டின் தொடக்கத்தில் இருந்தே திறன் பயன்பாட்டை அதிகரிக்க மக்கள் மற்றும் வணிகர்களால் நாங்கள் ஊக்குவிக்கப்பட்டோம்.

இதன் காரணமாக நமது பொருளாதார வளர்ச்சி வீதம் இன்று ஐந்து சதவீதத்தை எட்டியுள்ளது. அதற்காக உழைத்த நிதி அமைச்சு, மத்திய வங்கி மற்றும் ஜனாதிபதி அலுவலக அதிகாரிகள் ஆகிய அனைவருக்கும் நான் நன்றி கூறுகின்றேன். நாட்டின் திறன் பயன்பாட்டை அதிகரிக்க உழைத்த ஏனைய அனைவருக்கும் நாம் நன்றி கூற வேண்டும்.

நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தி அதிகரித்துள்ளதால், அதில் ஒரு பகுதியை வரி வருமானமாகப் பெற்றுள்ளோம். அதுவும் எமது வருமானம் அதிகரிப்பதற்கு வழிவகுத்தது. சர்வதேச நாணய நிதியத்துடனான ஒப்பந்தத்தின் ஊடாகவே இவற்றை அடைய முடிந்தது. எனவே, அந்த ஒப்பந்தத்தை முன்னெடுத்துச் சென்று பாதுகாக்க வேண்டியது அவசியம்.

ஆளும்தரப்போ அல்லது எதிர்க்கட்சியோ இந்த உடன்படிக்கையைவிட்டு வெளியேற முடியாது. அவ்வாறு செய்தால் நாட்டில் மீண்டும் பொருளாதாரப் பிரச்சினைகள் உருவாகும். தற்போது இலங்கை வங்குரோத்து நிலையிலிருந்து மீண்டுள்ளது என்ற அறிவிப்பை வெளியிடத் தயாராகவேண்டும். அதன் பிறகு, வங்கிகளால் தேவையான நிவாரண நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

மக்களுக்கும் விரைவில் நிவாரணங்களை வழங்க நடவடிக்கை எடுக்கப்படவேண்டும். வருமான வரி செலுத்தும் வரம்பு ஒரு இலட்சத்தில் இருந்து ஒரு இலட்சத்து ஐம்பதாயிரமாக உயர்த்தப்பட்டுள்ளது. அதை இரண்டு இலட்சத்துக்கும் கொண்டு செல்ல நாணய நிதியத்துடன் விவாதித்தேன். அதற்கு அவர்கள் சம்மதிக்கவில்லை. பொருளாதாரம் வலுப்பெற்றவுடன் நாம் அதற்கேற்ப செயல்பட்டு அதிக சலுகைகளை வழங்கவேண்டும்.

ஆளும்தரப்பு இந்தத் திட்டத்திலேயே இருக்க வேண்டும். இதில் இருந்து வெளியேற வழி இல்லை. சுபீட்சமான காலமானாலும், கூடாத காலமானாலும் நாம் இந்த திட்டத்தையே தொடரவேண்டும். வீண் விமர்சனம் செய்வதில் எந்த அர்த்தமும் இல்லை என்பதை எதிர்க்கட்சியினரிடம் கூறுகிறேன். எதிர்க்கட்சிகளின் விமர்சனங்களை ஏற்றுக் கொள்கின்றேன். அது ஒரு பிரச்சினை இல்லை.

பொதுவாக, எதிர்க்கட்சிகள் ஆளும்தரப்பைப் புகழ்ந்து பேசுவதில்லை. ஆனால் நாணய நிதிய ஒப்பந்தத்தின் கட்டமைப்பிற்குள் இந்த விமர்சனங்கள் முன்வைக்கப்பட வேண்டும் என்பதை நான் உங்களுக்கு நினைவூட்ட விரும்புகிறேன் என்றுள்ளது.

## அர்ஜுன ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிறப்பித்தார்.

2015ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 27ஆம் திகதி இடம்பெற்ற மத்திய வங்கி பிணைமுறி சம்பவம் தொடர்பில் தொடரப்பட்டிருந்த வழக்கிற்கு இணையாகவே இந்த பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

சந்தேகநபர்கள் இருவரையும் நீதிமன்றத்தில் முன்னிலையாகுமாறு அழைப்பாணை பிறப்பிக்கப்பட்டிருந்த போதிலும் அவர்கள் நீதிமன்றத்தில் முன்னிலையாகாமையால் நீதிவானினால் இந்த பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

பிணைமுறி கொள்வனவின் ஊடாக ஆளும்தரப்புக்கு 600 மில்லியன் ரூபாவிற்கும் அதிக நட்டத்தை ஏற்படுத்தினர் என்று குற்றஞ்சாட்டி குற்றப்புலனாய்வு திணைக்களத்தால் சந்தேகநபர்கள் 6 பேருக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

இந்த வழக்கின் சந்தேகநபரான அர்ஜுன் அலோசியஸை அடுத்த வழக்கின் போது நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்துமாறு சிறைச்சாலைகள் அதிகாரிகளுக்கு நீதவான் உத்தரவிட்டார்.

# காலநிலையின் சமநிலையை பேண நடவடிக்கை எடுங்கள்

## யாழ்.சர்வமதப் பேரவை வடக்கு ஆளுநரிடம் கோரிக்கை

வடக்கு மாகாணத்தின் காலநிலையின் சமநிலையை பேணுவதற்கான நடவடிக்கை எடுங்கள் என யாழ். மாவட்ட சர்வமத பேரவை வடக்கு மாகாண ஆளுநரிடம் கோரிக்கை முன்வைத்துள்ளது.

யாழ். மாவட்ட சர்வமத பேரவைக்கும் வடக்கு மாகாண ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகம் இடையிலான சந்திப்பு திங்கட்கிழமை மாலை நடைபெற்றது.

இந்த சந்திப்பு தொடர்பாக யாழ். மாவட்ட சர்வமத பேரவையின் செயலாளர் ஐ.ராஜ்குமார் தெரிவிக்கையில் -

சர்வமத விழுமியங்களை மையப்படுத்தி ஒரு மாநாட்டை நடத்துவது தொடர்பில் கலந்துரையாடினோம்.

குறிப்பாக சமயங்களின் அறநிலைய வகுப்புகளை உரிய முறையில் தொடர்ச்சியாக மேற்கொள்ளுதல் அந்த வகுப்புகள் ஊடாக காலநிலை சமநிலை பேணுதல், சுற்றாடல்களை பாதுகாப்பாக வைத்திருத்தல், தனியார் வகுப்புகளை ஒரு முறையான கொள்கையை நடைமுறைப்படுத்தி அதை நடைமுறைப்படுத்தல் சமயங்களுக்கிடையான ஒற்றுமையை வலுப்படுத்தல் போன்ற விடயங்களை மையமாக கலந்துரையாடியுருந்தோம்.

மேலும் தற்போது நிலவும் சீரற்ற வானிலை, தாழமுக்கம் காரணமாக பெய்த கனமழை, வெள்ளப்பெருக்கு காரணமாக ஏற்பட்ட அவல நிலையானது மனித பொறுப்பீனத்தால் ஏற்பட்டது.

சட்ட விரோதமான முறையில் கால்வாய்களை மூடியும், குளங்கள் காணாமலாக்கப்பட்ட நிலை, ஒழுங்கான வடிகால் வசதிகளின்மை, பேணப்பட வேண்டிய சுற்றுச்சூழலை பேணாமையால் ஏற்பட்டதாகும்.

இத்தகைய விடயங்களுக்கு உரிய முறையில் சட்ட நடவடிக்கை மேற்கொண்டு இனியும் இத்தகைய அவல நிலை ஏற்படாதிருக்க உறுதிப்படுத்தலை மேற்கொள்ளுமாறும் வலியுறுத்தினோம்.

மேலும், தனியார் கல்வி நிலையங்களை நடாத்துவதற்கு ஒன்றிணைந்த அமைப்பை உருவாக்கி பொறுப்பு கூறலை ஏற்படுத்துதல் மற்றும் காலநிலைக்கு ஏற்ப விவசாயத்துக்கு உரிய இடத்தை கொடுத்தல், மேம்படுத்துதல் போன்ற விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடினோம்.

எதிர்கால சமுதாயத்திற்கு ஏற்ப பலவகையான விடயங்கள் தொடர்பில் கலந்துலையாடல்களை மேற்கொண்டுள்ளதுடன், யாழ்ப்பாண சர்வமத மாநாடு நடத்துதல், அதனை தொடர்ந்து மாவட்ட ரீதியாகவும் மாகாண ரீதியாகவும் மாநாடுகளை நடத்தி அதில் மத தலைவர்கள், பொது நிலையினர் பொதுமக்களை உள்ளடக்கியதாக மாநாடு நடத்தபடவேண்டும் என்பதை மையப்படுத்தியதாக இந்தக் கலந்துரையாடல் நடைபெற்றது.

இந்த சந்திப்பில் யாழ். மாவட்ட சர்வமத பேரவை தலைவர் சிவஸ்ரீ கிருபானந்த குருக்கள் உட்பட சர்வமத பிரதிநிதிகள் கலந்து கொண்டோம். - என்றார்.

# குடாநாட்டில் கசிப்பு நிலையம் பொலிஸாரினால் முற்றுகை

## ஒருவர் கைது

யாழ்ப்பாணத்தில் சட்டவிரோத மதுபான உற்பத்தி நிலையம் பொலிஸாரால் முற்றுகையிடப்பட்டு 60 லீற்றர் கோடாவுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

அரியாலை பகுதியில் சட்டவிரோத மதுபான உற்பத்தி நிலையம் ஒன்று இயங்கி வருவதாக மாவட்ட குற்றத்தடுப்பு பொலிஸ் பிரிவினருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

அவ்விடத்தில் இருந்து சட்டவிரோத மதுபான உற்பத்திக்கு பயன்படுத்தப்பட்ட காஸ் அடுப்பு, சிலிண்டர், 60 ஆயிரம் லீற்றர் கோடா என்பவற்றை பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

கைது செய்யப்பட்ட நபரையும், மீட்கப்பட்ட பொருள்களையும் மேலதிக சட்ட நடவடிக்கைக்காக யாழ்ப்பாண பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

யாழ்ப்பாண பொலிஸார் சந்தேகநபரை பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.



# கோப் குழு தலைமையை எதிர்க் கட்சிக்கு தாருங்கள்

## சஜித் பிரேமதாச வலியுறுத்து

கோப் குழுவின் தலைமைப் பதவியை எதிர்க்கட்சிக்கு வழங்குமாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச ஜனாதிபதியிடம் வலியுறுத்தினார். ஆனால் ஜனாதிபதி அதற்கு மறுப்புத் தெரிவித்தார்.

கோப் குழுவின் தலைமைப் பதவியை ஆளும் தரப்புக்கு வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதற்காக காரணங்கள் உள்ளன. நிறுவன கட்டமைப்புகளை விசாரிக்க வேண்டியுள்ளது. அரச நிர்வாகத்துடன் குறித்த நிறுவனங்களின் தகவல்கள் வரும். இதன்படி அதனை முறையாக முன்னெடுத்துச் செல்லும் வகையில் கோப் குழுவின் தலைமைப் பதவியை ஆளும் கட்சி வைத்திருக்க தீர்மானித்துள்ளது. இது அணைவரும் கலந்துரையாடி எடுத்த முடிவாகும் என ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க பதிலளித்தார்.

ஜனாதிபதி அநுரகுமார திசநாயக்க புதன்கிழமை நாடாளுமன்றத்திற்கு வருகை தந்து விசேட உரையாற்றினார். அதைத் தொடர்ந்து, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச மற்றும் எதிர்க்கட்சி உறுப்பினர் நளின் பண்டார ஆகியோர் இந்தக் கோரிக்கையை முன்வைத்தனர்.

ஐக்கிய மக்கள் சக்தியின் உறுப்பினர் நளின் பண்டார, ஆளும்தரப்பு பொறுப்பு முயற்சிகள் பற்றிய (கோப்) குழுவின் தலைமைப் பதவியை எதிர்க்கட்சிக்கு வழங்கி நாங்கள் அமைத்த சம்பிரதாயத்தை முன்னெடுத்துச் செல்ல சந்தர்ப்பம் வழங்குமாறு ஜனாதிபதியிடம் கேட்டுக் கொள்கின்றோம் என ஜனாதிபதியிடம் வலியுறுத்தினார்.

இதன்போது எழுந்து பதிலளித்த சபை முதல்வர் பிமல் ரத்நாயக்க, ஆளும்தரப்புக் கணக்குகள் பற்றிய (கோபா) தலைமைப் பதவி எதிர்க்கட்சிக்கு வழங்கப்படும். இந்நிலையில் கோபா குழுவினால் கடந்த காலங்களில் நிறுவனங்களில் இடம்பெற்ற மோசடிகள் தொடர்பில் விசாரிக்க வேண்டியுள்ளது.

இது தொடர்பில் கடந்த காலங்களில் நாங்கள் கோரிக்கைகளை முன்வைத்து வந்தோம். ஆகவே இந்தக் குழுவின் தலைவர் பதவி ஆளும்தரப்பிடம் இருக்க வேண்டும். இதற்கமைய கோபாவின் தலைமைப் பதவி எதிர்கட்சியிடமும் கோப் குழுவின் தலைமைப் பதவி ஆளும்தரப்பிடமும் இருக்கும் என்றார்.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச அதற்குப் பதிலளித்தபோது, நளின் பண்டார முன்வைத்த யோசனை தொடர்பில் ஜனாதிபதி கவனம் செலுத்த வேண்டும் என்றார்.

கடந்த காலங்களில் எதிர்க்கட்சியில் நாங்கள் ஒன்றாகப் பணியாற்றியுள்ளோம். அதன்படி இந்தக் குழு தொடர்பில் ஆராய்ந்து குழுவின் தலைமைப் பதவி தொடர்பில் சாதகமான பதிலை வழங்குவீர்கள் என்று எதிர்பார்க்கின்றோம் என்றார்.

பதிலளித்த ஜனாதிபதி அநுரகுமார திசநாயக்க, கடந்த காலங்களில் இந்தக் குழுக்களின் தலைமைப் பதவி ஒரு தடவை மாத்திரமே எதிர்க்கட்சியிடம் இருந்தது. பல சந்தர்ப்பங்களில் ஆளும் கட்சியிடமே இருந்தது. எங்களிடையே நடந்த கலந்துரையாடலின் அடிப்படையில் உங்களின் கோரிக்கை இன்றியே கோபா குழுவின் தலைமைப் பதவியை எதிர்க்கட்சிக்கு வழங்கத் தீர்மானிக்கப்பட்டது.

கோப் குழுவின் தலைமைப் பதவியை ஆளும் தரப்புக்கு வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதற்குக் காரணங்கள் உள்ளன. நிறுவனக் கட்டமைப்புகளை விசாரிக்க வேண்டியுள்ளது. அரச நிர்வாகத்துடன் குறித்த நிறுவனங்களின் தகவல்கள் வரும். அதன்படி அதனை முறையாக முன்னெடுத்துச் செல்லும் வகையில் கோப் குழுவின் தலைமைப் பதவியை ஆளும் கட்சி வைத்திருக்க தீர்மானித்துள்ளது. இது அனைவரும் கலந்துரையாடி எடுத்த முடிவாகும் என்றார்.

காலைக்கதிர்
Kalaikkathir

# மாகாண சபைகளுக்கு முழு அதிகாரங்கள் கிடைக்குமாயின் அது பிராந்தியங்களுக்கான ஒரு வரப்பிரசாதமாக அமையும்

## அஷ்ரப் தாஹிர் தெரிவிப்பு

(பாறுக் ஷிஹான்)

மாகாண சபையின் முழுமையான அதிகாரங்கள் கிடைக்குமாயின் அது இப்பிராந்தியத்துக்கான ஒரு வரப்பிரசாதமாக நாங்கள் பார்க்கின்றோம் என அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அஷ்ரப் தாஹிர் தெரிவித்துள்ளார்.

மாகாண சபை முறைமை தொடர்பில் எழுந்துள்ள சர்ச்சைகள் மற்றும் மாகாண சபை அதிகாரங்கள் குறித்து அம்பாறை மாவட்டம் நிந்தவூர் பகுதியில் அவரது அலுவலகத்தில் விசேட செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

மேலும் தனது கருத்தில் குறிப்பிட்டதாவது -

ஒன்பது மாகாணங்களில் மாகாண சபைகள் தற்போது இயங்கி வருகின்றன. இந்த மாகாண சபையானது மக்களுக்கான பணிகளை செய்வதற்கும் மக்களுக்கான வேலைத்திட்டங்களை இலகுபடுத்துவதற்கும் இந்தியா இலங்கை ஒப்பந்தத்தின் மூலமாக வடக்கு கிழக்கை பிரதிநிதித்துவப் படுத்துகின்ற தமிழ் முஸ்லிம் மக்களுக்காக உருவாக்கப்பட்டது. இந்த மாகாண சபை முறைமையால் கடந்த காலங்களில் இரு மாகாணங்களை தவிர ஏனைய ஏழு மாகாணங்களை சேர்ந்த மக்கள் தான் பயனடைந்தார்கள் என்பதை நான் கூற விரும்புகின்றேன்.

இதில் வட மாகாணம், கிழக்கு மாகாணம் என இரண்டு மாகாணங்களை குறிப்பிட்டு சொல்ல வேண்டும். இதில் கிழக்கு மாகாணத்தில் முஸ்லிம், தமிழர் , சிங்களவர்கள் வாழ்ந்து வருகிறார்கள். இங்கு உரிய அதிகாரம் வழங்கப்படாமையால் தான் இம்மாகாணத்தில் எமது சமூகம் முழுமையான நன்மையை பெற்று கொள்ள முடியாது உள்ளது.

எனவே தான் இந்த மாகாண முறை என்பது ஒழிக்க வேண்டும் என்று ஒரு நிலைப்பாடு தற்போது உள்ள அரசாங்கத்தில் உள்ளவர்கள் பரவலாக பேசப்படுகின்ற விடயமாக உள்ளது. அத்துடன் இந்த சந்தர்ப்பத்தில் இன்னும் மூன்று வருடங்களுக்கு பின்னர் தான் இவ்விடயம் குறித்து பேச முடியும் என்ற மற்றும் ஒரு கருத்தும் இன்னொரு சாராரால் வைக்கப்பட்டிருக்கின்ற கருத்துக்களாகும்.

ஆனால் மக்களுக்கான பணிகளை துரிதப்படுத்துகின்ற அத்துடன் அபிவிருத்தி சார் பணிகள் மக்களுக்காக சென்றடைய வேண்டும் என்பதுடன் வெளிநாட்டு நிதிகளை பெற்றுக்கொள்வதற்காகவும் மாகாண சபை முறை அறிமுகப்படுத்தப்பட்டது.

கடந்த காலங்களில் நாங்கள் பல தடைகளை சந்தித்து இருக்கின்றோம். அதில் அதிகார ரீதியாகவும் அபிவிருத்திகளுக்கு நிதி வழங்குவது ரீதியாகவும் இங்கு முழுமையாக மறுக்கப்பட்டிருந்தது. காணி பொலீஸ் அதிகாரங்கள் இவ்விரு மாகாணங்களிலும் மறுக்கப்பட்டிருந்தாலும் கூட ஏனைய ஏழு மாகாணங்களிலும் காணி பொலீஸ் அதிகாரங்கள் மறுக்கப்பட்டு இருந்தாலும் அவர்களுடைய கைகளில் தான் அந்த அதிகாரங்கள் இருந்தன. இதனால் அம்மாகாண மக்கள் நன்மை அடைந்தார்கள். அங்கு மத்திய அரசாங்கமும் மாகாண அரசாங்கமும் ஒன்றாக பயணித்து ஒரு சமூகத்திற்கு பணிகளை செய்கின்ற முறைமையை நாங்கள் காண்கின்றோம்.

குறிப்பாக வடக்கு மாகாணம் மற்றும் கிழக்கு மாகாணத்தின் காணி பொலீஸ் அதிகாரங்கள் சிறுபான்மை மக்களின் கைகளுக்கு சென்றால் பொலீஸ் அதிகாரம் காணி அதிகாரம் இரண்டையும் தங்களுக்கு ஏற்றால் போல் பயன்படுத்தி விடுவார்கள் என்ற அச்சத்தின் காரணமாக அச்சட்டங்களை அமுல்படுத்துவதற்கு மத்திய அரசு மிக நீண்ட காலமாக தடைகளை அல்லது அதிகாரத்தை வழங்காமல் இருந்து வருகின்றது.

எனவே மாகாண சபைகளின் தேர்தல் நடத்தப்படுகின்ற சந்தர்ப்பத்தில் அதிகாரங்கள் முழுமையாக வழங்கப்படுமாக இருந்தால் மக்கள் பிரயோசனம் அடைவார்கள்.

அரசியல்வாதிகளும் மக்களுக்கு பணிகளை செய்ய வேண்டும் என்பதற்காகவே இந்த அதிகாரங்களை கோருகின்றார்கள். அரசியல்வாதிகள் மக்களுக்கும்



அரசுக்கும் இடையில் இருக்கின்ற ஒரு இடைத்தரகர்கள் போன்று அங்கு இருக்கின்ற வேலைத்திட்டங்களை மக்களுக்கு கொண்டு வந்து சேர்க்கின்ற மக்கள்பிரதிநிதிகளாக இருக்கிறார்கள்.

எனவே தற்போது உள்ளூராட்சி மன்றங்களுக்கு அதிகளவான அதிகாரங்களை வழங்கி இந்நாட்டின் பணிகளை துரிதமாக செய்வதற்கான ஒரு சந்தர்ப்பத்தை எதிர்பார்த்துக் கொண்டிருப்பதாக தற்போதைய தேசிய மக்கள் கட்சி ஆட்சியாளர்கள் செயற்பாட்டாளர்கள் பேசுவதை நாங்கள் காண்கின்றோம்.

ஆகவே உள்ளூராட்சி மன்ற தேர்தல் முதலில் நடத்துவதற்கான வாய்ப்பு இந்த அரசாங்கத்தில் இருக்கின்றது என்பதை அவர்களது செயற்பாட்டில் இருந்து தெரிந்து கொள்ள மடிகின்றது. அந்த வகையில் எதிர்கால தேர்தலின் ஊடாக மாகாணசபையின் முழுமையான அதிகாரம் கிடைக்கப்பெறும் ஆக இருந்தால் அது இப்பிராந்தியத்துக்கான ஒரு வரப்பிரசாதமாக நாங்கள் பார்க்கின்றோம் என அவர் மேலும் குறிப்பிட்டார்.

# மாவட்ட இலக்கியப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு பாராட்டு

(ஷினாஸ்)



கலாசார அலுவல்கள் திணைக்களத்தால் வருடம் தோறும் நடத்தப்பட்டுவருகின்ற தேசிய இலக்கிய விருது வழங்கல் விழாவை முன்னிட்டு பிரதேசமட்டம், மாவட்ட போட்டிகள் நடத்தப்பட்டு வருகின்றன. மாவட்ட மட்ட போட்டிகளில் முதல் மூன்று இடங்களை பெற்ற வெற்றியாளர்களை பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வு காரைதீவு பிரதேச செயலக கூட்ட மண்டபத்தில் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது



மாவட்ட கலாசார உத்தியோகத்தர் ரிஎம்.றின்ஸான் ஒருங்கிணைப்பில் நடைபெற்ற இந்த நிகழ்வில் அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் சிவஞானம் ஜெகராஜன் பிரதம அதிதியாக கலந்து கொண்டு வெற்றி பெற்ற மாணவர்களுக்கு சான்றிதழ் மற்றும் பரிசுகளை வழங்கி பாராட்டி கௌரவித்தார்.



பாடசாலை மாணவர்களுக்கு மத்தியில் நடத்தப்பட்ட போட்டி மற்றும் திறந்த பிரிவு போட்டியென பிரதேசமட்டத்தில் நடத்தப்பட்டு முதலிடத்தை பெற்ற போட்டியாளர்கள் மாவட்ட மட்டத்திற்கு தெரிவு செய்யப்பட்டு மாவட்டத்தில் முதலிடத்தை பெற்றவர்கள் தேசிய மட்டப் போட்டிக்கு தெரிவு செய்யப் பட்டமை குறிப்பிடத்தக்கது. இதில் மாவட்ட மட்டத்தில் வெற்றி பெற்ற போட்டியாளர்கள் இங்கு சான்றிதழ்கள், பரிசுகள் வழங்கி கௌரவிக்கப்பட்டனர் .

இதில் காரைதீவு பிரதேச செயலாளரும் பொறியியலாளருமான ஜிஅருணன், உதவி பிரதேச செயலாளர் எஸ். பார்த்தீபன், கலாசார உத்தியோகத்தர் சுரேஷ்குமார் உட்பட பிரதேச செயலகங்களில் கடமையாற்றும் கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

அம்பாறை மாவட்டத்தில் அண்மையில் ஏற்பட்ட வெள்ள அனர்த்தத்தின் போது உயிரிழந்தவர்களுக்கு இங்கு அஞ்சலி செலுத்தப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. நிகழ்வுகளை இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் அறிவிப்பாளர் ஏ.எல்.எம்.ஷினாஸ் தொகுத்து வழங்கினார்.

காலைக்கதிர்
Kalaikkathir

# கடன்களை மறுசீரமைப்புச் செய்ய தொழில் முனைவோருக்கு வாய்ப்பு

## ஜனாதிபதி புதனன்று நாடாளுமன்றில் உரை

இலங்கை வங்கிகளில் கடன் பெற்ற தொழில் முனைவோர் தமது கடன்களை மறுசீரமைத்துக்கொள்ள கால அவகாசம் ஒன்று வழங்கப்பட்டும் என்று ஜனாதிபதி அநுரகுமார திசநாயக்க தெரிவித்தார்.

ஜனாதிபதிப் பதவியை ஏற்றதன் பின்னர் முதல் தடவையாக நாடாளுமன்ற அமர்வில் கலந்துகொணடு விசேட உரையாற்றிய போதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

எமது வெளிநாட்டு கையிருப்பை 2028 ஆம் ஆண்டளவில் 15.1 பில்லியன் டொலர்களாக அதிகரித்துக்கொள்ளும் எதிர்பார்ப்புடன் நாம் இருக்கிறோம். 15.1 டொலர் பில்லியன்களை ஈட்டிக்கொள்ள முடியும் என்ற வலுவான நம்பிக்கை எமக்கு இருக்கிறது. இதுபற்றி பலரும் ஆலோசனைகளை வழங்கினர். அவை நல்ல ஆலோசனைகள். ஆனால் முக்கியமான விடயம் என்ன?

இப்போது நாம் 12.55 பில்லியன் டொலர்களையும் அதேபோல் செலுத்தத்தவறிய கடன் 1.7 டொலர் பில்லியன் களையும் நாம் மறுசீரமைப்புக்கு உட்படுத்தியுள்ளோம். இந்த 12.5 பில்லியன் டொலர்களில், 11.5 பில்லியன் டொலர்கள் 2015 - 2019 வரையான ஆளும்தரப்புப் பெற்றுக்கொண்ட கடனாகும். அன்று இந்த ஆலோசணைகளை வழங்கியிருந்தால் எமது நாடு வங்குரோத்து நிலையை அடைந்திருக்காது. அதனால் ஆலோசனைகள் தாமதமாகிவிட்டன என்பதை நினைவில் கொள்ளுங்கள். ஆலோசனைகளை சரியான நேரத்தில் வழங்குவதே அதற்கான பெறுமதியாகும். மிகத் தாமதமாகி ஆலோசனை வழங்கினால் அது வலிதற்றதாகிவிடும். இந்த விடயம் புரிகிறதா?

சர்வதேசநாணய நிதியத்துடன் இரண்டாவது மீளாய்வை நிறைவு செய்து இரண்டாவது தவணைக்கும் அனுமதி பெறப்பட்டிருந்தது. நாம் அதிகாரத்தை கைப்பற்றும் வேளையில் மூன்றாவது மீளாய்வு தாமதமாகியிருந்தது. அதனை, செப்டம்பரில் ஆரம்பிக்க வேண்டியிருந்தது. இருப்பினும் தேர்தல் நடக்கின்ற வேளையில் மூன்றாவது மீளாய்வுக்குத் தயாரில்லை என்பதை சர்வதேச நாணய நிதியம் அறிவித்திருந்தது. அதன்படி, பொதுத்தேர்தல் நிறைவடைந்த பின்னர் நவம்பர் 16 ஆம் திகதி நாம் மீண்டும் சர்வதேச நாணய நிதியத்துடன் மூன்றாவது மீளாய்வை ஆரம்பித்தோம். இரண்டாவது மீளாய்வில் முன்னைய அரசாங்கத்தினால் எட்டப்பட்ட அடைவுகள், இணக்கப்பாடுகள் பல காணப்பட்டன.

அவற்றில் ஒன்று, வாடகை வருமான சொத்துக்கள் மீது 2025 ஆம் ஆண்டிலிருந்து வாடகை வருமான வரி விதிப்பது குறித்த இணக்கப்பாடு இரண்டாவது மீளாய்வில் எட்டப்பட்டிருந்தது. அதேபோல் ஏற்றுமதிச் சேவை மீது நூற்றுக்கு முப்பது வீதமான நிறுவன வரி, ஏற்றுமதிச் சேவைக்கு 30 வீத வரி விதிக்கவும் இரண்டாவது மீளாய்வில் இணக்கம் காணப்பட்டிருந்தது. அதேநேரம், ஜனவரியிலிருந்து விசேட வர்த்தக பொருட்கள் மீதான வரியை நீக்கி, பெறுமதி சேர் வரியுடன் இணைப்பது குறித்த யோசனை முன்வைக்கப்பட்டிருந்தது. இந்த விசேட வர்த்தக பொருட்கள் மீதான சேவை வரியினாலேயே எமது நாட்டின் உள்நாட்டு உற்பத்தியாளர்களை பாதுகாப்பதற்காக வரி விதிப்பு, வரி அதிகரிப்பு, வரி குறைப்பு ஆகியவற்றை செய்கிறோம். இரண்டாவது மீளாய்வு கூட்டத்தில் இந்த சட்டத்தை இரத்துச் செய்ய தீர்மானிக்கப்பட்டிருந்தது. அதற்கு பதிலாக 'வற்' வரி விதிக்க தீர்மானிக்கப்பட்டது. அதேபோல், தனிப்பட்ட வருமானம் மீதான வரியற்ற எல்லைகளை அவ்வண்ணமே தக்க வைக்கவும் தீர்மானிக்கப்பட்டிருந்தது.

2025ஆம் ஆண்டு ஏப்ரல் மாதமளவில், இலகுபடுத்தப்பட்ட பெறுமதி சேர் வரியை நீக்குவதற்கான இணக்கமும் எட்டப்பட்டிருந்தது. 'வற்' வரியின் ஊடாக வர்த்தகர்களுக்கு அவசியமான கடனை விரைவில் பெற்றுக்கொள்ளக்கூடிய வாய்ப்பு இருந்தது. இருப்பினும் அதனை நீக்குவதற்கான யோசனையொன்று கொண்டுவரப்பட்டிருந்தது.

மூன்றாவது மீளாய்வை ஆரம்பிக்கும் வேளையில் எமது நாட்டின் தொழில்வான்மையாளர் மீது விதிக்கப்பட்டிருந்த வரி தொடர்பில் தொழில்வான்மையாளர்கள் அதிருப்தியில் இருந்தனர். பல்கலைக்கழக விரிவுரையாளர்களின் சங்கம், வைத்தியர்களின் சங்கம், வங்கி முகாமையாளர்கள் சங்கம் உள்ளிட்ட பெருமளவானவோர் இந்த உழைக்கும் போது செலுத்தும் வரி தொடர்பில் அதிருப்தியில் இருந்தனர்.

வரி எல்லையை ஒரு இலட்சத்திலிருந்து ஒன்றரை இலட்சங்களாக அதிகரித்துள்ளோம். அதேபோல், நூற்றுக்கு ஆறு வீதத்திற்குள் அடங்கும் வகையில் தனிநபர் வருமான வரியின் முதல் தொகுதியை, 5 இலட்சத்திலிருந்து 10 இலட்சம் வரையில் அதிகரிக்கும் வகையில் திருத்தம் செய்ய எம்மால் முடிந்ததுள்ளது. அதனால் ஒன்றரை இலட்சம் மாதச் சம்பளம் பெறுவோர் வரியிலிருந்து 100 வீதம் விடுவிக்கப்படுவர். 2 இலட்சம் சம்பளம் பெறுவோர் 75 வீதம் வரியிலிருந்து விடுவிக்கப்படும். இரண்டரை இலட்சம் சம்பளம் பெறுபவரின் வரி 61 சதவீதத்தினால் விடுவிக்கப்படுவர். 3 இலட்சம் சம்பளம் பெறுவோர் 47 வீதம் வரியிலிருந்து விடுவிக்கப்படுவர். மூன்றரை இலட்சம் சம்பளம் பெறுவோர் 25 வீதம் வரியிலிருந்து விடுவிக்கப்படுவர். அதனால் அதிக வருமானம் பெறுவோருக்கு குறைந்த சலுகையும், குறைந்த சம்பளம் பெறுவோர் அதிக சலுகையும் கிடைக்கும் வகையில் உழைக்கும் போது செலுத்தும் வரி இனை குறைத்துக்கொள்ள எம்மால் முடிந்துள்ளது.

அடுத்ததாக எமது பிள்ளைகளின் போஷாக்கு குறைப்பாடு தொடர்பிலான பிரச்சினை குறித்து சிறப்பு கவனம் செலுத்தியுள்ளோம். உங்களுக்கு நினைவிருக்கும் கடந்த அரசாங்கத்தினால் பால்மா மற்றும் யோகட் போன்ற உற்பத்திகளுக்கு வற் வரி விதிக்கப்பட்டிருந்தது. அதனால் மூன்றாவது மீளாய்வில் எமது நாட்டில் உற்பத்திச் செய்யப்படும் பால் சார் உற்பத்திகளின் மீதான பெறுமதி சேர் வரி குறைக்க வேண்டும் என்ற இணக்கப்பாட்டினை எட்டியுள்ளோம். கடந்த அரசாங்கம் இரண்டாவது மீளாய்வுக் கூட்டத்தில் 30 சதவீத ஏற்றுமதிச் சேவை வரி விதிக்கப்படும் என இணக்கம் காணப்பட்டிருந்தது. அதனை 15 சதவீதமாக குறைப்பதற்கான இணக்கப்பாட்டினை நாம் எட்டியுள்ளோம். சேவை ஏற்றுமதிக்கு 15 சதவீத வரியென்பது சர்வதேசத்திலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட தரநிலையாகும். அந்த அளவில் வரியை குறைத்துக்கொள்ள எம்மால் முடிந்துள்ளது.

அதேபோல் (ருஷ்வாஜுழடனஷ்பெ வுயஒ) நிறுத்திவைத்தல் வரி இனை ஐந்து சதவீத்திலிருந்து பத்து சதவீதமாக அதிகரித்துக்கொள்ள இணக்கம் எட்டப்பட்டது. முதியவர்கள், ஓய்வுபெற்றவர்கள், ஒரு தொகை பணத்தை வைப்பிலிட்டு அந்த வட்டியில் வாழ்கிறார்கள். அவ்வாறானவர்கள் மாதம் ஒன்றரை இலட்சத்துக்கும் அதிகமான வரியை பெற்றால் மட்டுமே அவர் வரி விதிப்புக்குள் உள்வாங்கப்படுவார். சாதாரணமாக ஒன்றரை இலட்சம் வருமானம் இருக்க வேண்டும். ஆனால் நிறுத்திவைத்தல் வரியின் ஊடாக, ஒன்றரை இலட்சத்துக்கு குறைவான வரியை பெற்றாலும், நிறுத்திவைத்தல் வரி என்ற வகையில் பேணிச் செல்லும் இயலுமை உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு உள்ளது. அதனால் இறைவரித் திணைக்களத்துக்குள் எந்தவொரு பிரஜையும் தான் குறித்த தொரு வரிக்கு உரித்தானவர் அல்லவென நினைக்கும் பட்சத்தில், மாத வருமானம் அல்லது வட்டி வருமானம் ஒன்றரை இலட்சமாக இல்லாமல் இருக்குமாயின், தனக்கு வருடமொன்றுக்கு கிடைக்கும் வருமானம் 18 இலட்சம் அல்லவென எவரேனும் நினைத்தால், அவர்கள் உள்நாட்டு வருமான வரி திணைக்களத்திற்குச் சென்று தமது வரி தொடர்பில் தகவல்களை வழங்கி வரி விதிப்பை தவிர்த்துகொள்ள முடியும்.

இதனால், ஓய்வூதியதாரர்கள் போன்ற மாதாந்தம் ஒன்றரை இலட்சம் என்ற வரி வரம்புக்குகுறைந்த வருமானத்தை ஈட்டும், 10 சதவீதத்திற்கும் குறைந்த வருமானத்திற்கு வரி செலுத்துவோரிடத்திலிருந்து நிறுத்திவைத்தல் வரி இனை அறவிடாமலிருக்கவும், குறைந்த வருமானம் காரணமாக உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திடம் கோரிக்கை விடுக்கும் சந்தர்ப்பம் உள்ளது. அவ்வாறானவர்களுக்கு விரைவான ஆலோசனைகளை வழங்குவதற்கான நிலையங்களை கொழும்பிலுள்ள தலைமையகத்திலும், நாடளாவிய ரீதியிலுள்ள அலுவலகங்களிலும் ஸ்தாபிக்க தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. அதனால் எவருக்கும் பாதிப்பு ஏற்பட இடமளியோம். அதனால் எமது வரி வலையை விஸ்தரிப்பதற்கான நோக்கமே அன்றி, குறைந்த வருமானம் ஈட்டுவோருக்கு மேலதிக நிறுத்திவைத்தல் வரியினை விதிப்பதற்கான தேவை ஏற்படாது.

அடுத்ததாக, வாகனச் சந்தையை கட்டம் கட்டமாக திறந்து விட வேண்டும். ஏனென்றால் அதனுடன் இணைந்த தொழிற்துறையொன்றுள்ளது. அதனுடன் தொடர்புள்ள தொழில்முனைவோர் உள்ளனர். நீண்ட காலத்திற்கு வாகன சந்தையை தடுத்து வைக்க முடியாது. அதனால் 3 கட்டங்களில் இந்த வாகன சந்தையை திறந்து விட திட்டமிட்டுள்ளோம். பயணிகள் போக்குவரத்து பஸ் மற்றும் விசேட தேவைகளுக்கு பயன்படுத்தும் கார் என்பவற்றை கடந்த 14 ஆம் திகதி முதல் இறக்குமதி செய்வதற்கு ஏற்ற வகையில் திறந்து விட்டுள்ளோம். பண்டப் போக்குவரத்துக்கான கார் மற்றும் தனிப்பட்ட பயன்பாட்டுக்கான கார் என்பவற்றுக்கு அனுமதி வழங்கவும் திட்டமிட்டுள்ளோம். தனிப்பட்ட பயன்பாட்டுக்கான கார் அனுமதியை 2025 பெப்ரவரி முதல் அமுல்படுத்த இருக்கிறோம்.

இதனால் மீண்டும் டொலர் நெருக்கடி ஏற்படும் என யாரும் சந்தேகம் கொள்ளத் தேவையில்லை. மத்திய வங்கியுடன் நீண்ட கலந்துரையாடல் நடத்தி இந்த வாகன இறக்குமதியினால் வெளிச்செல்லும் டொலரின் அளவு தொடர்பில் மதிப்பீடு செய்துள்ளோம். அது எந்தளவிற்கு எமது பொருளாதாரத்திற்கு தாங்கக் கூடியதாக இருக்கும் என மதிப்பிட்டுள்ளோம். எமது பொருளாதாரத்தை மீளமைக்க வேண்டுமானால் இந்த வாகன சந்தையை

காலைக்கதிர் Kalaikkathir

# கடன்களை...

முன்பக்கத் தொர்ச்சி....

திறந்து விட வேண்டும். அதனால் கடுமையான நிலைப்பாட்டில் இருந்து இந்த வாகன சந்தையை திறந்து விடுகிறோம். ஏனென்றால் இது முக்கியமானது என நாம் கருதுகிறோம்.

குறிப்பாக மூன்றாவது மீளாய்வுடன் தொடர்பு இல்லாவிட்டாலும் கூட இடை நிறுத்தப்பட்டுள்ள இந்த பராட்டே சட்டம் 2024 டிசம்பர் 15 ஆம் திகதி முதல் முடிவுக்கு வருகிறது. சிறுமற்றும் மத்தியதர தொழில்முணைவோர் இன்னும் வழமை நிலைக்குத் திரும்பவில்லை. எனவே அவர்களுக்கு சிறிது அவகாசம் வழங்க வேண்டும். 2024.09.31 ஆம் திகதி அளவில் செலுத்த வேண்டிய முழு கடன் 1385 பில்லியன் என கணிப்பிடப்பட்டுள்ளது. முழு கடன் பெற்றோர் எண்ணிக்கை 7 52 896 . முழு கடன் பெற்றோர் தொகையில் 99 வீதமானோர் பெற்ற தொகை 25 மில்லியனை விடக் குறைவாகும். இது தான் புள்ளிவிபரம் கடன் பெற்றோர் 7 52 896 பேர் இருந்த போதும் அதில் 99 வீதமானவர்கள் 25 மில்லியனை விட குறைவாக கடனை செலுத்தாதோர்களாகும்.

அதனால் பராட்டே சட்டம் முழுமையாக இடைநிறுத்தப்பட்டிருப்பதால் வங்கிக் கட்டமைப்பிலும் நெருக்கடி ஏற்பட வாய்ப்புள்ளது. ஏனென்றால் அவர்களிடம் இருப்பதும் மக்களின் வைப்புப் பணமாகும். அது தவிர வேறு வழியில் வங்கிக் கட்டமைப்புக்கு நிதி கிடைப்பதில்லை. எனவே மக்களின் வங்கிக்கட்டமைப்பிலுள்ள நிதியின் பாதுகாப்பு தொடர்பிலும் உத்தரவாதம் வழங்க வேண்டியுள்ளது.

கடந்த காலத்தில் பல நிதி நிறுவனங்கள் வீழ்ச்சி அடைந்தன. அதன் பாதிப்பு பணிப்பாளர் சபையினரையோ வங்கித்துறையினரையோ சென்றடையவில்லை. வைப்பாளர்கள்தான் அதன் பாதிப்பை அனுபவித்தனர். பெருமளவில் நிதி நிறுவனங்கள் வீழ்ச்சியடைந்ததில் வைப்பாளர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டனர். சிலர் தற்கொலை செய்து கொண்டனர். இன்றும் ஈடிஐ போன்றவற்றில் பணம் வைப்புச் செய்தோர் பெரும் வேதனையுடன் உள்ளனர்.

இவ்வாறு பல நிதி நிறுவனஙகள் வீழ்ச்சியடைந்ததால் வைப்பாளர்களும் பொதுமக்களும்தான் பாதிக்கப்பட்டனர். அதனால் நாம் வங்கிக் கட்டமைப்பை பாதுகாப்பது மற்றும் சிறு மத்திய தொழில்முனைவோரை பாதுகாப்பது ஆகிய இரண்டையும் சமமாக கருத்திற் கொள்ள வேண்டும். அதன் படி டிசம்பர் 15 ஆம் திகதி நிறைவடைய 2025 மார்ச் 31 ஆம் திகதி வரை சுமார் மூன்றரை மாதங்கள் நீடிக்க நாம் முடிவு செய்துள்ளோம். அதில் செலுத்த வேண்டிய வட்டி தவிர கடன் தொகை 25 மில்லியனுக்குக் குறைவான கடனை மறுசீரமைக்க 2025 டிசெம்பர் 15 வரை கால அவகாசம் வழங்குவதற்கு நாம் ஒரு திட்டத்தை தயாரித்துள்ளோம்.

இந்த மறுசீரமைப்பிற்கு அவர்கள் தயாரா என்பது தொடர்பில் மார்ச் 31 ஆம் திகதி வங்கிகளுக்கு அறிவிக்க முடியும். வங்கிகளும் கடன்பெற்றோரும் கலந்துரையாடி முடிவு எடுக்க 31 ஆம் திகதி வரை கால அவகாசம் உள்ளது. தான் செலுத்த வேண்டிய கடன் தொடர்பில் மறுசீரமைப்பு திட்டமொன்றைத் தயாரிக்க முடியும். 99 வீதமான தொழில்முணைவோருக்கு இந்த வாய்ப்பு வழங்கப்படுகிறது.

செலுத்த வேண்டிய வட்டி தவிர்ந்த தொகை 25 மில்லியனுக்கும் 50 மில்லியனுக்கும் இடைப்பட்ட கடன் செலுத்த வேண்டியோர் மார்ச் 31 ஆம் திகதி மறுசீரமப்புத் திட்டத்திற்கான தமது விருப்பத்தை வங்கிகளுக்கு முன்வைக்க முடியும். புதிய மறுசீரமப்பிற்கு 2025.09.15 ஆம் திகதி வரை மூன்று மாத காலம் வழங்குவோம். வங்கிக்கும் கடன் பெற்றோருக்கும் கடன் மறுசீரமைப்பு திட்டம் பற்றி கலந்துரையாட 9 மாத காலம் உள்ளது.

செலுத்த வேண்டிய கடன் தொகை தவிர 50 மில்லியனுக்கு மேற்பட்ட கடன் பெற்றோரின் கடன் மறுசீரமைப்பிற்கு 2025.06.15 வரை 6 மாத கால அவகாசம் வழங்குகிறோம். அவர்களும் மார்ச் 31 ஆம் திகதிக்கு முன்னர் தமது கடன் மறுசீரமைப்புத் திட்டத்திற்கான உடன்பாட்டை வங்கிக்கு அறிவிக்க வேண்டும்.

வங்கிக்கும் அவர்களுக்கும் இடையில் ஜுன் 15 ஆம் திகதிக்கு முன்னர் மறுசீரமைப்புத் திட்ட உடன்பாடு எட்டப்பட வேண்டும். அதனால் சிறு மற்றும் நடுத்தர தொழில் முனைவோரின் பாதுகாப்பையும் வங்கிகளின் பாதுகாப்பையும் கருத்திற் கொண்டே இந்தத் திட்டத்தைத் தயாரித்துள்ளோம். இது தொடர்பான உடன்பாட்டிற்கு நாம் வந்துள்ளோம்.

இந்தப் பொருளாதார நெருக்கடி நிலையில் எமது பொருளாதாரத்தின் கீழ் மட்டத்தில் உள்ள மக்கள் கருத்திற்கொள்ளப்படாத பொருளாதாரமாக மாறியது. அவர்கள் பெரும் நெருக்கடியை எதிர்கொண்டனர். அடுத்த வரவு செலவுத்திட்டத்தில் அவர்கள் குறித்து கவனம் செலுத்தி அவர்களுக்கு சில நிவாரணங்கள் வழங்க எதிர்பார்க்கிறோம். அதற்கு முன்னர் இந்தப் பாராளுமன்றத்தில் நிறைவேற்ற வேண்டிய சில சட்டங்கள் உள்ளன. ஏப்ரல் மாதத்தில் இருந்து செயற்படுத்துவதாக இருந்தால் அதற்கு முன்னர் அதனைச் சட்டமாக நிறைவேற்ற வேண்டும்.

அதனால் சிலவற்றை நாம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்துள்ளோம். மேலதிகமாக நான் இந்த விடயத்தை முன்வைக்கிறேன். சிலவற்றுக்கு சட்டம் தேவை. சிலவற்றுக்கு அவசியமில்லை. அவை ஏற்கெனவே செயற்படுத்தப்படுகின்றன. ஓய்வூதியம் பெறுவோருக்கு இதுவரை வழங்கப்பட்ட கொடுப்பனவை ஒக்டோபர் மாதம் முதல் 3000 ரூபாயினால் அதிகரித்தோம். பொருளாதார நெருக்கடி நிலையுள்ள சூழலிலும் அவர்களுக்கு வாழ்வதற்கு கடினமான நிலை உள்ளது. விவசாயத்தில் ஈடுபடுவோருக்கு 25 ஆயிரம் ரூபா வரை பசளை நிவாரணத்தை அதிகரித்தோம். சில இடங்களில் இந்த பணம் கிடைப்பதில் தாமதம் இருப்பதாக தகவல் கிடைத்துள்ளது. நிதி அமைச்சுடன் பேசி எந்தத் தாமதமும் இன்றி அந்த நிவாரணத்தை விவசாயிகளுக்கு வழங்க திட்டம் தயாரித்துள்ளோம். இது தவிர விவசாயிகளுக்கு எரிபொருள் நிவாரணம் வழங்க நடவடிக்கை எடுத்தோம்.

அடுத்து பொருளாதார நெருக்கடியினால் பெரும்தாக்கம் மாணவர்களுக்கு ஏற்பட்டுள்ளது. சிலர் மேலதிக வகுப்புகளுக்குச் செல்வதை நிறுத்தியுள்ளனர். மேலதிக புத்தகங்கள் கொள்வனவு செய்வதை நிறுத்தியுள்ளனர். தேவையான உபகரணங்கள் கொள்வனவு செய்தை நிறுத்தியுள்ளனர். எந்த வகையிலும் இது உகந்த நிலைமையல்ல. வரவு செலவுத்திட்டத்தில் அவர்கள் குறித்து கவனம் செலுத்தும் முன்மொழிவுகளை சமர்ப்பிக்க உள்ளதோடு இந்த வருட இறுதிக்குள் அஸ்வெசும பெறும் குடும்பங்களிலுள்ள பாடசாலை செல்லும் பிள்ளைகளுக்கு பாடசாலை புத்தகங்கள் மற்றும் உபகரணங்கள் கொள்வனவு செய்வதற்கு 6000 ரூபா கொடுப்பனவு வழங்க நடவடிக்கை எடுப்போம்.

அஸ்வெசும பயனாளர்கள் தெரிவு செய்கையில் சரியாக தெரிவு நடந்ததா என்ற கேள்வி கிராமங்களில் எழுப்பப்படுகிறது. அஸ்வெசும பெற தெரிவு செய்யப்படவோ பிள்ளைக்கு பாடசாலைக் கல்விக்கான கொடுப்பனவுக்கு தெரிவு செய்யப்படவோ இல்லை என்ற குற்றச்சாட்டு உள்ளது. அதனால் அஸ்வெசும திட்டத்திற்கு உள்வாங்கப்படாத ஆனால் நிவாரணம் வழங்கப்பட வேண்டிய பிள்ளைகளை தெரிவு செய்து அடுத்த பாடசாலை தவணை ஆரம்பிக்கப்படுவதற்கு முன்னர் இந்த 6000 ரூபா கொடுப்பனவை வழங்க நடவடிக்கை எடுப்போம்.

அடுத்து விசேடமாக அஸ்வெசும 4 கட்டங்களாக செயற்படுத்தப்பட்டன. அதிலுள்ள 4 இலட்சக் குழுக்கள் இரண்டு டிசம்பர் 31 ஆம் திகதி அஸ்வெசும திட்டத்தில் இருந்து அகற்றப்பட உள்ளன. ஒரு குழு 4 இலட்சம், மற்றொரு குழு 4 இலட்சம் ,அடுத்த குழு 8 இலட்சம் , அடுத்தது 4 இலட்சம் என 20 இலட்சம் பேர் குழுக்களாக பிரிக்கப்பட்டிருந்தனர். அந்த குழுக்களில் இருந்த இரு 4 இலட்சம் பேர் கொண்ட குழுக்கள் டிசம்பர் 31 ஆம் திகதியுடன் அஸ்வெசும திட்டத்தில் இருந்து ஓரங்கட்டப்பட இருந்தன . அதில் கீழுள்ள குழுவை மார்ச் 31 வரை 3 மாதத்தினால் நீடித்துள்ளோம். இரண்டாவது குழுவை 2025 டிசமர்பர் 31 வரை ஒருவருடத்தினால் நீடித்துள்ளோம். அதே போன்று அஸ்வெசும பெறுவோருக்கும் பெறாதோருக்கும் இடையில் கிராமங்களில் பிரச்சினை உள்ளது. இதனை மீளமைக்க வேண்டும். பழைய கட்டமைப்பின் கீழ் தான் முன்னர் மீளமைப்பு நடந்தது. அது வெற்றிகரமாக நடந்ததா என்பதை கிராமங்களில் உள்ளோர் அனுபவிக்கின்றனர்.

அந்தக் கட்டமைப்பின் ஊடாகப் பெறும் தகவல்கள், கிராம உத்தியோகஸ்தரும் சமுர்த்தி உத்தியோகஸ்தரும் அபிவிருத்தி உத்தியோகஸ்தரும் சிலவேளை சமூக சேவை உத்தியோகஸ்தரின் ஒத்துழைப்புடன் மீள ஆராய்ந்து தற்பொழுது அஸ்வெசும கிடைக்காத ஆனால் நிவாரணம் கிடைக்க வேண்டியவர்களை மீண்டும் தெரிவு செய்து அடுத்த ஏப்ரல் மாதம் முதல் அவர்களுக்கு அஸ்வெசும வழங்க நடவடிக்கை எடுப்போம்.

அதே போன்று வங்கியூடாகத்தான் அஸ்வெசும வழங்க தீர்மானிக்கப்பட்டிருந்தது. பொதுவாக வங்கிக் கணக்கொன்றை ஆரம்பிக்க அடையாள அட்டை அவசியம். அடையாள அட்டை பெற பிறப்புச் சான்றிதழ் வேண்டும். அஸ்வெசும கிடைக்க வேண்டிய குடும்பமாக அடையாளங் காணப்பட்டாலும் வங்கிக் கணக்கு ஆரம்பிக்க முடியாத காரணத்தினால் ஒன்றரை வருடங்களாக அவர்களுக்கு நிவாரணம் வழங்கப்படவில்லை. 67 ஆயிரம் குடும்பங்கள் இதில் அடங்கும். அஸ்வெசும் பெற தகுதி பெற்றும் ஆனால் அந்தப் பயணைப்பெற வங்கிக் கணக்கு ஆரம்பிக்க அடையாள அட்டையோ அடையாள அட்டை பெற பிறப்புச்சான்றிதழோ பெற முடியாத நிலையை அந்தக் குடும்பங்கள் எதிர்கொண்டுள்ளன. ஆட்சியாளர்கள் மிக நெருக்கமாக அவதானித்து தீர்க்க வேண்டிய பிரச்சினைகள் அல்லவா இவை. ஆனால் ஒன்றரை வருடங்களாக கருத்திற் கொள்ளாமல் விட்டனர். மத்திய வங்கியுடன் கலந்துரையாடி அவர்களுக்கு அடையாள அட்டையின்றி வங்கிக் கணக்கு ஆரம்பிக்க அவகாசம் வழங்க நாம் முடிவு செய்துள்ளோம்.

அதனால் அந்த அனைவருக்கும் நிலுவைத் தொகையுடன் அந்த பயனை வழங்க நடவடிக்கை எடுப்போம். சில விடயங்களை வரவு செலவுத்திட்டத்திற்கு முன்னர் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்க வேண்டும். சிலவற்றை பாராளுமன்றத்தில் நிறைவேற்ற வேண்டும். மார்ச் 21 ஆம் திகதியளவில் வரவு செலவுத்திட்ட விவாதம் நிறைவடைய இருக்கிறது. அதன் பின்னர் சட்டத்தை நிறைவேற்ற முயன்றால் இதனை ஏப்ரல் மாதம் வழங்க முடியாது போகும். இந்தப் பயன்களை துரிதமாக வழங்கும் வகையில் இவற்றை விரைவாக வர்த்தமானியில் வெளியிட்டு அடுத்த ஜனவரியில் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்க எதிர்பார்க்கிறோம். ஏனென்றால் 'வற்' வரி திருத்தம் உள்ளது. அஸ்வெசும சட்டத்தில் பல திருத்தங்கள் உள்ளன. திருத்தங்களுக்கு அனைவரும் ஒத்துழைப்பு வழங்குவார்கள் என எதிர்பார்க்கிறோம் என்றார்.

# வெள்ளம் பாதித்த கிழக்குப் பாடசாலைகளை புனரமைக்க போதிய நிதியை விடுவியுங்கள்

## ஹிஸ்புல்லா எம்.பி. வலியுறுத்து

வெள்ளப்பெருக்கு அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டுள்ள கிழக்கு மாகாண பாடசாலைகளை புனரமைப்பதற்கு அரசாங்கம் போதுமான நிதியை விடுவிக்க வேண்டும். அத்துடன் பாதிக்கப்பட்டுள்ள வீதிகளையும் விரைவாக புனரமைக்க வேண்டும் என ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹிஸ்புல்லா சபையில் வலியுறுத்தினார்.

நாடாளுமன்றத்தில் புதன்கிழமை நடைபெற்ற பாடசாலை மாணவர்களுக்கான காகிதாதிகளுக்கான குறைநிரப்பு பிரேரணை மீதான விவாதத்தில் உரையாற்றும்போது இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது;

ஆட்சிக்கு வந்தவுடன் எரிபொருள் மற்றும் மின்கட்டணத்தையும், அதேபோல் அத்தியாவசிய உணவுப் பொருட்களின் விலைகளையும்குறைப்பதாகஆளும்தரப்பு மக்களுக்கு வாக்குறுதி வழங்கியது. ஆனால் ஆட்சிக்கு வந்து இரண்டு மாதங்கள் நிறைவடைந்துள்ள நிலையில் எந்தவொரு பொருட்களின் விலைகளும் குறைக்கப்படவில்லை. மாறாக அரிசி, தேங்காய்உட்பட அத்தியாவசியஉணவுப் பொருட்களின் விலைகள் சடுதியாக உயர்வடைந்துள்ளன.

அத்தியாவசியஉணவுப்பொருட்களின் விலைகளை கட்டுப்பாட்டுக்குள் வைத்துக்கொள்ள ஆளும்தரப்பு உரிய நடவடிக்கைகளை எடுக்கவேண்டும்.

மின்சாரக் கட்டணத்தை எதிர்வரும் ஆறு மாதங்களுக்கு குறைக்க முடியாது என்று இலங்கை மின்சார சபை குறிப்பிட்டுள்ள நிலையில் 11 சதவீதத்தால் மின்கட்டணத்தை குறைக்க முடியும் என்று இலங்கை பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது.

புதுப்பிக்கத்தக்கசக்திவளத்திட்டத்தின் ஊடாகவே மின்கட்டணத்தை குறைக்க முடியும். ஆகவே புதுப்பிக்கத்தக்க சக்தி வளத் திட்டத்தை நடுத்தர மக்கள் மத்தியில் அமுல்படுத்த ஆளும்தரப்பு விசேட கவனம் செலுத்தவேண்டும். அத்துடன் புதுப்பிக்கத்தக்க சக்தி வளங்கள் ஊடாக உற்பத்தி செய்யப்படும் மின் அலகுகளுக்கு உரிய கட்டணத்தை வழங்க வேண்டும்.

சமீபத்தில் நிலவிய மழையுடனான காலநிலையால் கிழக்கு மாகாணம் வெள்ளப்பெருக்கு அனர்த்தத்துக்கு உள்ளானது. பெரும்பாலான பாடசாலைகள் வெள்ளப்பெருக்கினால் பாதிக்கப்பட்டுள்ளன. பாடசாலைகளை புனரமைக்க மாகாண கல்வி அமைச்சு திணைக்களத்திடம்வலியுறுத்தியபோதும் நிதி இல்லை என்று குறிப்பிடப்படுகிறது.

ஆகவே, பாதிக்கப்பட்டுள்ள பாடசாலைகளைபுனரமைக்கபோதுமான நிதியை மாகாண கல்வி அமைச்சுக்கு வழங்குமாறு கேட்டுக்கொள்கிறேன் என்றார்.

# முன்பள்ளிப் பிள்ளைகளுக்கும் காலை உணவு வழங்க முடிவு

முன் பிள்ளைப்பருவ அபிவிருத்தி நிலையங்கள் மற்றும் முன்பள்ளிப் பிள்ளைகளுக்கான காலை உணவு வழங்கும் வேலைத்திட்டத்தை முன்னெடுப்பதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

முன் பிள்ளைப்பருவ அபிவிருத்தி தொடர்பான தேசிய செயலகத்தால் 2017 ஆம் ஆண்டு தொடக்கம் சுகாதார அமைச்சின் தொழிநுட்ப வழிகாட்டலின் கீழ் எடை குறைந்த பிள்ளைகள் அதிகமாகவுள்ள முன் பிள்ளைப்பருவ அபிவிருத்தி நிலையங்கள் மற்றும் முன்பள்ளிப் பிள்ளைகளுக்கான காலை உணவு வழங்கும்வேலைத்திட்டம்நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

தற்போது ஒரு பிள்ளைக்கு நாளொன்றுக்கு 60 ரூபா வழங்கப்படுவதுடன், 2025 ஆம் ஆண்டில் 155,000 பிள்ளைகள் பயனடையவுள்ளனர்.

சமகாலத்தில் உணவுப் பொருள்களின் விலை அதிகரித்துள்ளமையால், ஒரு பிள்ளைக்கு நாளொன்றுக்கு ஒதுக்கப்படுகின்ற 60 ரூபா தொகை போதுமானதாக இன்மையால், குறித்த தொகையை 100 ரூபாவாக அதிகரிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

'எடை குறைந்த பிள்ளைகள் அதிகமாகக் காணப்படுகின்ற முன்பள்ளிகள்' எனும் அளவுகோலை அடிப்படையாகக் கொண்டு தெரிவு செய்யப்படுகின்ற முன்பிள்ளைப்பருவ அபிவிருத்தி நிலையங்கள் அல்லது முன்பள்ளிகளின் குறித்த வேலைத்திட்டத்தைத் தொடர்ந்தும் நடைமுறைப்படுத்துவதற்கும் மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.



காலைக்கதிர் Kalaikkathir

# நாடாளுமன்றுக்கு நடுவே தனக்கு ஆசனம் கேட்ட அருச்சுனா எம்.பி.

நாடாளுமன்றத்தில் உள்ள எதிர்க் கட்சித் தலைவரின் அலுவலகத்துக்குச் செல்வதற்கு எனக்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளது. ஆகவே எதிர்க்கட்சியில் அமர விருப்பமில்லை. சபையின் நடுவில் அமர்வதற்கு ஆசனம் ஒதுக்கித் தாருங்கள் என்று யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இராமநாதன் அர்ச்சுனா சபாநாயகரிடம் கோரினார்

நாடாளுமன்றத்தில் புதன்கிழமை இடம்பெற்ற பாடசாலை மாணவர்களுக்கான காகிதாதிகளுக்கான குறை நிரப்பு பிரேரணை மீதான 2 ஆம் நாள் விவாதத்தின்போது அவர் இப்படிக் கோரினார்.

அருச்சுனா ஆளும் தரப்பா எதிர்த் தரப்பா என்கிற சர்ச்சை எழுந்த நிலையிலேயே அவர் இப்படிக் கூறினார். "அருச்சுனாவை எம்முடன் (ஆளும்தரப்பு) தொடர்புபடுத்தி எதிர்க்கட்சியினர் கருத்துத் தெரிவிக்கின்றனர். அவர் கிண்ணியாவில் எங்கள் தேர்தல் மேடையில் ஏறவில்லை, உங்கள் மேடையில்தான் ஏறினார்" என்று எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவைப் பார்த்து சபை முதல்வரான பிமல் ரத்னாயக்க தெரிவித்தார்.

ஆகவே அருச்சுனாவைத் தம்முடன் தொடர்புப்படுத்திப் பேசவேண்டாம், கண்ணாடி அறையில் இருந்துக் கொண்டு கல்லெறிய வேண்டாம் என்றும் குறிப்பிட்டார்.

அப்போது ஆவேசமாக எழுந்த அருச்சுனா, எதிர்க்கட்சித் தலைவர் தனது கல்வித் தகைமைகளைச் சபைக்கு அறிவித்தார். ஆனால் அவற்றைச் சபையில் சமர்ப்பிக்கவில்லை. அவர் அவற்றைச் சபைக்குச் சமர்ப்பிக்கவேண்டும். அவை உண்மையானதா என்பதை உரிய நிறுவனத்துடன் தொடர்புக் கொண்டு ஆராய வேண்டும் - என்றார்.

''எதிர்க்கட்சித் தலைவர் என்னுடன் உரையாற்றிய தொலைபேசி குரல் பதிவு உள்ளது, வேண்டுமாயின் அதனைச் சபையில் சமர்ப்பிக்கிறேன்.எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்துக்கு செல்ல எனக்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளது. சபையில் பேச எனக்கு நேரம் ஒதுக்கப்படுவதில்லை. அதனால் இந்த எதிர்கட்சிப்பக்கத்தில் அமர விருப்பம் இல்லை. எனவே எனக்கு சபையின் நடுவே ஆசனம் ஒன்றைப் போட்டுத் தாருங்கள்" என சபாபீடத்திடம் கோரினார்.

இவ்விடயத்தை சபாநாயகரின் கவனத்துக்கு கொண்டு செல்வதாக சபைக்கு தலைமை தாங்கிய உறுப்பினர் பதிலளித்தார்.

## எலிக் காய்ச்சல் தொடர்பில் விழிப்புணர்வு நடைபவனி

(நூருல் ஹுதா உமர்)

சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்திற்கு உட்பட்ட விவசாயிகளுக்கு எலிக்காய்ச்சல் (லெப்டோஸ்பைரோஸிஸ்) தொடர்பான விழிப்புணர்வு நடைபவனி நிகழ்வு புதன்கிழமை இடம்பெற்றது.

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் திருமதி சகிலா இஸ்ஸடீனின் ஆலோசனைக் அமைய சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் ஜே. மதனின் தலைமையில் இந்த விழிப்புணர்வு நடைபவனி முன்னெடுக்கப்பட்டது.

இதில் எலிக் காய்ச்சல் தொடர்பான



விழிப்புணர்வு துண்டு பிரசுரங்கள் வழங்கப்பட்டன. இதன் போது சாய்ந்தமருது குடாக்கரை மேற்கு விவசாயிகள் சங்கத்தின் உறுப்பினர்களும், பொதுமக்களும் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

## அதிகாரப் பகிர்வு பற்றிய செயலமர்வு திருமலையில்

(ஹஸ்பர்)

இலங்கை தேசிய சமாதானப் பேரவையின் ஏற்பாட்டில் அதிகாரப் பகிர்வைச் சூழவுள்ள எதிர்மறை கருத்துக்களை எதிர்கொள்ளல் மற்றும் உள்ளடக்கத்திற்கானவலியுறுத்தர்கள்பற்றிய செயலமர்வு புதன்கிழமை திருகோணமலையில் உள்ள கிழக்கு மாகாண முகாமைத்துவ அபிவிருத்தி பயிற்சி பிரிவு மண்டபத்தில் இடம் பெற்றது.

நிகழ்வில்திருகோணமலை மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட ஊடகவியலாளர்கள், பெண்கள் அமைப்பின் பிரதிநிதிகள், சமுகசெயற்பாட்டாளர்கள் என பலர் அழைக்கப்பட்டு இருந்தனர்.




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 20.12.2024இல் வெளியிடப்பெற்றது